பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a news paper.

விலை: ரூபா 6.00

நமது
# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 26 (29.05.2003) வியாழக்கிழமை இதழ்: 237

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(சி-892)
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)



திருமலையில் நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகள் - இராணுவத்தினர் சந்திப்புக்கு வரும் புலிகளின் தளபதிகளை முதலாவது படத்திலும், திருமலை கட்டளைத் தளபதி கேணல் பதுமனுக்கு பிரிகேடியர் சேனவீர கைலாகு கொடுப்பதை இரண்டாவது படத்திலும், கட்டைபறிச்சான் பாலத்தில் கனரக ஆயுதத்துடன் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் புலிகளை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# புலிகள் - இராணுவத் தரப்பு திருகோணமலையில் சந்திப்பு

## தொடர்புகளை உருவாக்குவது குறித்து இணக்கம்

(திருமலையிலிருந்து சசிக்குமார், கீதபொன்கலன்)

**விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும், படைத்தரப்புக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பு, நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. நேற்று மாலை 4.30 மணிக்கு, மூதூர் - கட்டைபறிச்சான் பிரதேசத்திலுள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. இதன்போது, இரு தரப்பினருக்குமிடையில் தொடர்புகளை உருவாக்குவது குறித்து (Lines Of Communication) இணக்கம் காணப்பட்டது.**

இந்தச்சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், தளபதி உதயன், தளபதி விமலன் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியற் செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோரும்,

படைத்தரப்பில் - பிரிகேடியர் அப்துல் சாகீர், பிரிகேடியர் சேனவீர மற்றும் படையதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஜென் லெடாங் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பு, திருமலையில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த முதலாவது சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இரு தரப்புக்கும் இடையில் இவ்வாறான சந்திப்புக்களை அடிக்கடி நடத்துவதென்றும், இந்தச் சந்திப்பில்

## 'ட்ரிப்பிள் ஆர்' திட்ட வரைபினை உள்ளடக்கிய அரசின் யோசனை

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக வரையப்பட்ட 'ட்ரிப்பிள் ஆர்' (RRR) திட்டத்தை உள்ளடக்

கொடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜீஎல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவுள்ள சுயாதீன அமைப்பு, அரசியல் யாப்பின் திட்ட வரையறைக்



விண்ணாணம் விநாசியார்

அரசிட யோசனை, பழைய கள்ளு புதிய மொத்தைக் கதைதானோ...?

# அரசாங்கத்தின் பதில் நேரடியாக கையளிப்பு

## நோர்வே அதிகாரிகள் கிளிநொச்சி வந்தனர்

வட - கிழக்கில் அமைக்கப்பட வேண்டிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கான - அரசின் உத்தியோகபூர்வமான பதில், நேற்று நோர்வேத் தூதரக அதிகாரிகளினால் நேரடியாக விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது.

நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் ஸ்ராங்ஙினும் மற்றும் இன்னொரு தூதரக அதிகாரியும் - அரசின் பதிலுடன், நேற்று உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்குச் சென்றனர்.

மாலை 2.15 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த மேற்படி இருவரும், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்து அரசின் பதிலை உத்தியோக பூர்வமாகச் சமர்ப்பித்தனர்.

### அமெரிக்க அதிகாரிகள் யாழ். விஜயம்!

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி கிறிஸ் லோங் மற்றும் அரசியல் ஆய்வு உத்தியோகத்தர் பத்மினி இராஜதுரை ஆகியோர் - அரசியல் நிலைமைகளைப் பற்றி ஆராய நேற்றைய தினம், யாழ்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக வரையப்பட்ட -'ட்ரிப்பிள் ஆர்' (RRR) திட்டத்தை உள்ளடக்கியதான சுயாதீன அமைப்பினையே விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் கொடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜீஎல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவுள்ள சுயாதீன அமைப்பு, அரசியல் யாப்பின் திட்ட வரையறைக்குள் உள்ளடங்கியதாகவே இருக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த முதலாவது சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இரு தரப்புக்கும் இடையில் இவ்வாறான சந்திப்புக்களை அடிக்கடி நடத்துவதென்றும், இந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது. (04,10)

தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி கிறிஸ் லோங் மற்றும் அரசியல் ஆய்வு உத்தியோகத்தர் பத்மினி இராஜதுரை ஆகியோர் - அரசியல் நிலைமைகளைப் பற்றி ஆராய நேற்றைய தினம், யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

மாலை 2.15 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த மேற்படி இருவரும், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்து அரசின் பதிலை உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பித்தனர்.

அரசின் மேற்படி பதில் - ஏற்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே அரசாங்கத்தினூடாக தற்போது வித்தியாசமான முறையில் பேசுகிறோம்!

## கேணல் கருணா மட்டக்களப்பில் பேச்சு

நிதி வழங்கும் ஜப்பானிய மாநாட்டில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கலந்துகொண்டால், பெருந்தொகையான நிதியினை சர்வதேச சமூகம் எமக்கு வழங்கும். ஆனால், இந்நிதி, வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியே. காரணம், இந்நிதியினை எமது பகுதிகளுக்கு செலவீடு செய்ய, சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

- இவ்வாறு நேற்று, தரவை முகாம் தாக்குதல் நினைவுதினத்தில் கலந்துகொண்டு பேசிய, கேணல கருணா அம்மான் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - (10 ஆம் பக்கம் பார்க்க)

# தரவை படைமுகாம் தாக்குதலின் 8 ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு

1998 ஆம் ஆண்டு தரவை இராணுவமுகாம் தாக்குதலின்போது வீரச்சாவடைந்த லெப்.கேணல் வினோதன் உட்பட 18 வேங்கைகளின் 8 ஆம் ஆண்டு நினைவு தினம், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் 'மீனகம்' இராணுவத்தளத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டு-அம்பாறை மாவட்டத்திலுள்ள பெருமளவு போராளிகள் கலந்துகொண்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி, மேலதிக அரசாங்க அதிபர் இ.புண்ணியமூர்த்தி உட்படப் பல திணைக்களத் தலைவர்களும் பெருமளவிலான பொதுமக்களும் பங்கேற்றனர்.






மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தரவை முகாம் தாக்குதல் நினைவுநாளில் - புலிகள் படையணியின் அணிவகுப்பையும், லெப்.கேணல் வினோதனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் தளபதிகளையும், கேணல் கருணா அம்மானும் ஏனைய தளபதிகளும் அணிவகுப்பைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றில், துப்பாக்கிப் பிரயோகம் செய்து, கலாட்டா செய்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கு, சபாநாயகரின் அனுமதியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் இடம்பெற்ற வைபவத்தில், பங்குபற்றிய அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் பெரேரா, அங்கு கலாட்டாவில் ஈடுபட்டார்.

இதன்போது, விடுதியின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதுடன், விடுதிப் பணியாளர்கள் ஆறுபேரையும் இவர் தாக்கியுள்ளார். தனது பிஸ்ரலால் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் பெரேரா துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே, நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் பெரேராவைக் கைது செய்யப் பொலிஸார், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் அனுமதியைக் கோரியிருப்பதாகத் தெரியவருகின்றது.

### பளைப் பிரதேசத்தில்

# இருநூறு குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு!

(தென்மராட்சி)

பளைப் பிரதேசத்தில் மீள்க்குடியமர்ந்துள்ள இருநூறு குடும்பங்களுக்கு, உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவுத் தொகையான ரூபா 25 ஆயிரம் கடந்த வாரம், பளைப் பிரதேச செயலகத்தில் வைத்து, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் வழங்கப்பட்டது.

முன்னர், இப்பிரதேசத்தில் 416 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா 15 ஆயிரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (34)

# எதிர்க்கட்சி எம்.பிக்களும் நாடாளுமன்றில் அரசின் நடவடிக்கைகளுடன் இணைவர்!

### சட்டமூலத்தைத் தயாரிப்பதற்குத் தீர்மானம்

நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் - அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக் கூடியவகையில்,நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளில் திருத்தம் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையின்படி, 15 நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 15 மேற்பார்வைக் குழுக்களை அமைத்து, அதன் தலைமைத்துவங்களை - எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் பிரதமர் தீர்மானித்துள்ளார் . இதற்காக, இலகுவான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது. இதன்படி, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளில் திருத்தம் கொண்டுவரப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### யாழ். நகரப் பகுதியில்

# நடைபாதை வியாபாரம்; கட்டுப்படுத்த முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தைத் தடைசெய்ய மாநகரசபையினரால் குறுக்குக்கம்பி வேலி போடப்பட்டும், அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

யாழ். நகரப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் நடைபாதை வியாபாரம் செய்வோருக்கு எதிராக, யாழ். மாநகரசபையினரும், பொலிஸாரும் பலமுறை நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், கட்டுப்படுத்தமுடியாத நிலையில், நடைபாதை வியாபாரம் செய்ய முடியாதவாறு, வீதியின் கரைகளை அண்டிக் கம்பிவேலி போடப்பட்டது. ஆனாலும், நடைபாதை வியாபாரிகள் அக்கம்பி வேலிப் பகுதிக்குள் தமது வியாபாரத்தைத் தொடர்ந்தும் செய்துவருவதைக் காணமுடிகின்றது. (ரா)

## சட்டவிரோத மண் அகழ்வு

வரணி வடக்கு, சிமிழ் அம்மன் கோயிலடிப் பகுதியில், சட்டவிரோதமாக மண் அள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில், வறுமைக்கோட்டின்கீழ் வாழும் சுமார் 24 குடும்பங்கள் வசிக்கின்றனர். மண் அகழப்படுவதால், இப்பகுதியில் - மழைக் காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால், தொற்றுநோய்கள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## சேவைக்காலப் பயிற்சிச் செயலமர்வு

(ஆழியவளை)

மருதங்கேணி - கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்கால்ப் பயிற்சிச் செயலமர்வு, நேற்று முன்தினம் முதல் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றுவருகிறது. (122)

## தாய்சேய் நல கிளினிக் ஆரம்பம

(நவிண்டில்)

தொண்டமனாறு கடற்கரை வீதியில் அமைந்துள்ள, ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தாய் சேய்நல கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் 4 ஆவது செவ்வாய்கிழமைகளில் இந்தக் கிளினிக் நடைபெறவுள்ளது.

## தமிழ்த்தினப் போட்டிகள்

உடுவில் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள் ஜூன் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள்-தமது விண்ணப்பங்களை ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கிடையில் அனுப்பிவைக்குமாறு, உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் குபேரநாதன் கேட்டுள்ளார். (101)

## கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில், கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன. எனவே, வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும், நாய்களுக்கான உரிமத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், உரிமத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது. (110)

## சுருக்கெழுத்துக்கழக மாணவர்கள் சுற்றுலா

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக மாணவர்கள் 45 பேர் , அண்மையில் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு திருகோணமலை, மாத்தளை, கண்டி, நுவரேலியா பண்டாரவளை, கதிர்காமம், மாத்தறை, கொழும்பு, சிகிரியா, மடு, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

## கூரையிலிருந்து வீழ்ந்து படுகாயம்

தச்சுவேலை செய்யும்போது, தவறுதலாக வீட்டின் கூரையிலிருந்து விழுந்த நபர் ஒருவர், படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில், புதுக்குடியிருப்பு, வள்ளிபுனத்தைச் சேர்ந்த சி.சித்திரவேலாயுதம் (வயது 38) எனும் நபரே படுகாயமடைந்த நிலையில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார். (சு,121,ரா)

## ஆலய மஹோற்சவம் ஆரம்பம்

(புத்தூர்)

திருநெல்வேலி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய மஹோற்சவம், இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறவுள்ளது, 11 ஆம் திகதி தேர் உற்சவமும் 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (110)

## சூறாவளியினால் 40 லட்சம் ரூபா இழப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில், மாதகல் கடற்பரப்பில் நிகழ்ந்த, மினி சூறாவளியினால், அப்பகுதி மீனவர்களின் நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த இழப்பினை ஈடுசெய்ய முடியாத மீனவர்கள், வழமைபோல தொழிலில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளனர். இதனால், தமக்கு இலகுகடன் அடிப்படையில் பணம் வழங்குமாறு கடற்தொழில் சமாசத்தை இவர்கள் அணுகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரா)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(நவிண்டில்)

பருத்தித்துறை, சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின், பதினாறாவது வருடாந்த பொதுக் கூட்டம் - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (110)


## தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்வி கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை யாழ். வைத்தியசாலையில் 31.05.2003 வரை மீளளிக்கப்படாத ரூபா 2000/= கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 07.06.2003 திகதியன்று காலை 10.00 மணியாகும். ஏற்கனவே பணம் செலுத்தியவர்கள் அப்பற்றுச்சீட்டைக் காட்டி விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகன்
அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(சி-965)

## மாநகரசபை யாழ்ப்பாணம்

### கட்டட நிர்மாண, வீதி அமைப்பு வேலைக்கு தேவையான மூலப்பொருட்களை விரைவாக வழங்கக்கூடியவர்களைக் கோருதல்

2003 ஆம் ஆண்டுக்கான மாநகரசபையின் அவசர வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் மூலப் பொருட்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்துக்கு கொண்டுவந்து ஒப்படைக்கக்கூடிய வழங்குனர்கள் தங்களால் ஒருமாத காலத்தினுள் ஒப்படைக்கக்கூடிய மூலப்பொருட்களின் அளவும், ஒரு கியூப் கல், மணல் வேறு பொருட்களுக்கான விலையையும் கொண்டதாக படிவ அமைப்பில் தயாரித்து 02.06.2003 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறும், அதனைத் தொடர்ந்து மு.ப 11.00 மணிக்கு இடம்பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றுமாறும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

1. கிறசர் சல்லி, கண்டகல் 1/2", 3/4", 11/2", 1", 2", 4", 6"X 9", - ஒவ்வொரு கியூப்பின் விலை குறிப்பிடவும்.
2. நாகர்கோயில் மணல், அரியாலை மணல், கண்டாவளை மணல், ஊரிமண், செம்மண், கிறசர் டஸ்ட், வேறும் பாவனையிலுள்ள மணல் - ஒவ்வொரு கியூப்பின் விலையையும் குறிப்பிடவும்.
3. ஒரு மாத காலத்தில் வழங்கக்கூடிய பொருட்களின் அளவினைக் குறிப்பிடவும்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*

(சி-966)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

72 சிறி இலக்கமுடைய பழைய மொடல் குவோட்டா 375 லான்ட் - மாஸ்ரர் (பெட்டியுடன்) விற்பனைக்குண்டு. (ஒரு கைப் பாவனையில் உள்ளது) *தொடர்பு:- சாந்தன்கடை, ஆறுகால்மடம். சந்திக்கும் நேரம் காலை 8.00 மணி - பிற்பகல் 1.00 வரை-மாலை 4.00 - 8.00 வரை* (357)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ்,
ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
**இரகசியப் பொலிஸ் -115**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
**CASTAWAY** (இரவு 8.45)
(சி-882)

### ராஜா யாழ்ப்பாணம்.

3 வது வாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
(சி-883)



புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30

## கீர்த்தனா சுயதொழில் பயிற்சி நிலையம்

- ❖ புதிய பிரிவுகள் ஆரம்பம் - 01.06.2003
- ❖ பயிற்சி நெறிகள் :- *தமிழ்/ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கேக் ஐசிங், தலை அலங்காரம், ஸ்கிறீன் பிரிண்டிங், பெயின்ரிங், பூவேலைகள்*

ஆகியவற்றிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.

- ❖ ஆங்கில பேச்சு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- ❖ ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்.
- ❖ பயிற்சி நெறிக்காலம்:- 03 மாதம், பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.
- ❖ பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் பிள்ளைகள் உடன் தேவை.

*மேலதிக விபரங்களுக்கு:-*
ஆசிரியர் (ராகினி)
டச்சு றோட், உடுவில்.
ஸ்ரேசன் றோட் சுன்னாகம்.

(சி-964)

## அரசாங்கம் பொய்க் குற்றச்சாட்டு சுமத்துகிறதாம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், தன் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்துவதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இனப்பூசலுக்கு முடிவுகாண வேண்டும் என்பதற்காகத்தான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுததுக்கொண்டிருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார். வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரணத்துக்கான நிதியைக் கையளித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## சங்கீதசபை செயன்முறைப் பரீட்சை இடமாற்றம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த வட-இலங்கை சங்கீத சபையின் தரம் 5 ஆம், 6 ஆம் தேர்வு நாடிகளுக்கான செயன்முறைப் பரீட்சைகள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

# நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரை இடைக்கால நிர்வாகம் அவசியம்!

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

வட - கிழக்கில் கடந்த இருபது வருடங்களாக நீடித்த யுத்தத்தினால், அரச நிர்வாகம் அப்பகுதியில் சீர்குலைந்துள்ளது. நிரந்தரத்தீர்வு ஒன்று எட்டப்படும்வரை, அங்கு அரச நிர்வாக சேவைகளை ஒருங்கிணைக்க இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதே சிறந்தது என பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி - மகாவலி ரீகோட் விடுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு அரசசேவை ஊழியர்கள் பலர் ஓய்வுபெற்றுள்ளனர். மேலும், பலர் ஓய்வுபெறும் வயதை எட்டியுள்ளனர். கடந்த இருபது வருடங்களாக அரச நிர்வாக சேவைக்கு இப்பிரதேச இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

எனவே, இறுதித்தீர்வு எட்டப்படும் வரையில் இப்பிரதேசத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி, தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது குறித்துப் பிரஸ்தாபித்துள்ளது.

பொதுத்தேர்தல் நடைபெற்றால் எதிர்கொள்வதற்கு தயாராகவே உள்ளோம். நடைபெறும் தேர்தலில் ஐ.தே.மு. 125 இற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று மீண்டும் ஆட்சியமைக்கும். கண்டி மாவட்டத்திலும் ஒரு ஆசனம் கூடுதலாகக் கிடைக்கும். நாட்டில் அனைத்து மக்களும் நிரந்தர சமாதானம் ஏற்படுவதையே விரும்புகின்றனர். இதன் காரணமாகவே, 1994 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பொ.ஐ.முவுக்கு வாக்களித்தனர். ஆனால், மக்களின் எதிர்பார்ப்பும், வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

மீண்டும் ஒரு தேர்தலை விரும்பாத 29 பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களும், எமது கட்சியுடன் இணைந்துகொள்ளத் தயாராக உள்ளனர் எனவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

## அச்சுவேலியில் திடீர் பரிசோதனை

(நவக்கிரி)

அச்சுவேலியிலுள்ள வர்த்தக நிலையங்கள் நேற்றுமுன்தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அச்சுவேலி பஸ் நிலையப் பகுதிக்கு வந்த சுகாதாரப் பரிசோதகர்களுடன், தர நிர்ணய அதிகாரிகள் மற்றும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் சேர்ந்தே இப்பரிசோதனையை மேற்கொண்டனர்.

## பிரார்த்தனையில் ஈடுபடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி மற்றும் மலையகத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சுபீட்சகரமான வாழ்வுக்கும், வழமை நிலைக்கும் வேண்டி, இந்து மக்கள் அனைவரும் ஒரு வார காலத்துக்கு - வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் அனைத்திலும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு - நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தினர் கேட்டுள்ளனர்.



இலங்கை வங்கியின் வடமாகாண காரியாலயத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட வங்கியின் பொது முகாமையாளர் எஸ்.என்.பளிஹேன, கிளைகளுக்கும் அபிவிருத்தி வங்கியியலுக்கும் பொறுப்பான பிரதிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ.சீ.பெர்ணான்டோ, யாழ்ப்பாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதற்படத்திலும், யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் - எவ்.எக்ஸ்.சுதர்சன்)

# ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## எதிர்க்கட்சிகள் முயற்சி

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருவதாகத் தெரியவருகின்றது.

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்து, தென்மாகாணசபை அமைச்சரான 'சண்டி மல்லி' படுகொலை செய்யப்பட்ட பின்னர் சட்டம், ஒழுங்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதற்கு உள்துறை அமைச்சரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே காரணம் என்று எதிர்க்கட்சிகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தமது கட்சி ஆதரவாளர்களுக்கு எதிராக செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில்தான் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளன.

இதேவேளை, தன்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னரும் இத்தகைய நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சந்தித்த தாம், இதனை தோற்கடிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெள்ளப் பாதிப்புக்குள்ளாகாதோர் நிவாரணம் பெற முண்டியடிப்பு!

தென்பகுதியில் வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவதில் பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் புகார் செய்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்குவதற்கு எடுத்துச் செல்லப்படும் உதவிப் பொருட்களை, அனர்த்தங்களால் பாதிக்கப்படாத பகுதி மகைள் இடைமறித்து வாங்கிக்கொள்வதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகள் கிடைக்காமல் உள்ளன.

இதனால், பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரண விநியோகப் பணிகளை இடைநிறுத்தப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளன. இதனிடையே இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் நிவாரண விநியோகப் பணிகளை, இராணுவத்தினரின் உதவியுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

# ரஞ்சித் படுகொலை தொடர்பாக 4 பொலிஸ் குழுக்கள் விசாரணை

(கொழும்பு)

தென்மாகாணசபை அமைச்சர் ரஞ்சித் படுகொலை தொடர்பாக, நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றன.

இதேவேளை, குற்றப்புலனாய்வுத் தலைமையகத்துக்கு முன்பாக அந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றதாக வெளிவந்த தகவல்கள் தவறானவை என்று, குற்றப்புலனாய்வுப் பிரிவு உயரதிகாரி ஒருவர தெரிவித்தார்.

படுகொலை, கோட்டை - யோர்க் வீதியிலேயே இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முக்கிய முடிவுகள் குறித்து ஆராய பொ.ஐ.மு. பொதுக்குழு கூடுகிறது

தற்போதைய அரசியல் நெருக்கடிகள் மற்றும் ஜே.வி.பியுடனான கூட்டணி என்பன தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளால் கோரப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் தேசிய லொத்தர் சபை தொடர்பாக எழுந்திருக்கும் முரண்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

அத்துடன், தென்மாகாண சபையின் அமைச்சரான 'சண்டி மல்லி' படுகொலை செய்யப்பட்டதை அடுத்து எழுந்துள்ள பாதுகாப்புத் தொடர்பான நெருக்கடிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கைப் பேணத் தவறியுள்ள அரசாங்கம் மீது எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்றும் - ஜனாதிபதி சந்திரிகா பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், இந்தக் கூட்டத்தில் முக்கியமாக ஜே.வி.பியுடனான, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டணி தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

பொதுக்குழுவின் கூட்டத்தில் இந்தக் கூட்டணி தொடர்பாகவும், இதில் எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாடுகள் குறித்தும் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் அமுனுகம, மங்கள சமரவீர ஆகியோர் விளக்கமளிக்கவுள்ளனர்.

இதேவேளை -

ஜே.வி.பிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான அடுத்தகட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளன. இந்தப் பேச்சுக்களில், கூட்டணி குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான

# இடைத்தங்கல் முகாமுக்கு கிளிநொச்சியில் அடிக்கல்

(கிளிநொச்சி)

'யுனிசெப்' நிறுவன அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடைமுறைப்படுத்தவுள்ள - போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பி.ப 2 மணியளவில் அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த நரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மங்கள விளக்கினை யுனிசெப் நிறுவன வன்னிப்பிரதிநிதி பெனி புறூன், சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல்லை, 'யுனிசெப்' நிறுவன இலங்கைப் பிரதிநிதி சைபன், அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

சிறப்புரைகளை - தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.பி.ரெஜி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், யுனிசெப் பிரதிநிதி சைபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட 'யுனிசெப்' இலங்கைப் பிரதிநிதி சைபன் தனது உரையில், சிறுவர்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு, நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டமானது மிகுந்த வரவேற்புக்குரியது. இதற்காக, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பங்களிப்பு நல்குவது எமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றது.

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான நலன்நோன்புத் திட்டங்களை முன்னெடுக்க விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வமாகவும், ஆணித்தரமாகவும் உள்ளமை மிக்க மகிழ்ச்சி தருகின்றது. அவர்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனக் குறிப்பிட்டார்.

# காணாமற்போனோரை நினைவுகூர ஏற்பாடு!

காணாமற்போனோரின் நினைவாகச் சர்வதேச ரீதியில் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் காணாமற்போனோரின் உறவினர்கள் அமைப்பு-அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை அமைப்புக்களுடன் இணைந்து, காணாமற்போனோரை நினைவுகூரும் வகையில் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இன்று முதல், நாளை மறுநாள் வரை காணாமற்போனோர் சம்பந்தமான நிகழ்ச்சிகளை நடத்தவும், காணாமற்போனோரின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து வெளிப்படுத்தவும் காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.



யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையில், கணினிப் பயிற்சி பெற்று வெளியேறும் கூட்டுறவாளர்களின் ஒன்றுகூடல் கடந்தவாரம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூ.அ.ஆ. ஆணையாளர் சி.சிவலிங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர், தலைவர் மற்றும் விரிவுரையாளர்கள், பயிற்சியாளர்களுடன் வீரசிங்கம் மண்டபவாயிலில் எடுத்துக்கொண்ட படம்.

# இரத்தினபுரியில் மண்சரிவு அபாயம் பல இடங்களில் தொடர்ந்தும் நீடிப்பு!

இரத்தினபுரி மாவட்டத்தில் மேலும் பல பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் ஆபத்துக்கள் இருப்பதாகவும், இதனால் பொதுமக்களை அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனால் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளை - தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக சப்பிரகமுவ மாகாண முதலைமைச்சர் பிரகடனம் செய்துள்ளார்.

மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களில் ஒரே இரவில் 336 குடும்பங்கள் மண்சரிவு அபாயம் காரணமாக இராணுவத்தினரால் வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் மண்சரிவு அபாயம் இருப்பதாகத் தெரியவருகிறது. புவியியல் ஆய்வு நிபுணர்களின் ஆலோசனைகளின்படி அரசாங்கம், பல இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணன் படுகொலையுடன் அழகிரிக்குத் தொடர்பில்லையாம்!

## தமிழகப் பொலிஸ் தெரிவிப்பு

திராவிட முன்னேற்றக்கழக முன்னாள் அமைச்சர் தா.கிருஷ்ணனின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட கொலையாளிகளை, தாம் இனங்கண்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸாரால், இனங்காணப்பட்ட மூன்றுபேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுக் காவலில வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் கொலையுடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தின் பேரில், கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க.அழகிரி உட்பட 30 பேரை பொலிஸார் ஏற்கனவே கைதுசெய்துள்ளனர்.

எனினும், இந்தக் கொலையுடன் மு.க.அழகிரிக்கு நேரடித் தொடர்பு எதுவும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, மு.க. அழகிரியின் மனைவி, தனக்கும் கொலைமிரட்டல் விடுக்கப்படுவதாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

# முகமாலைச் சோதனை சாவடியில் கெடுபிடி அடிப்படை மனிதஉரிமை மீறல் எனப் புகார்!

## ஜூன் 5 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியில் சக பயணிகளைவிடத் திட்டமிட்ட முறையில் கெடுபிடிகளுடன் தம்மைப் படையினர் சோதனையிட்டமை, மனித உரிமையை மீறும்செயல் என சட்டத்தரணி ஒருவர் யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த 23 ஆம் திகதி ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்கு வந்த சட்டத்தரணியான நடராஜா காண்டீபனை முகமாலையில் வைத்துப் படையினர் விசாரித்துள்ளனர்.

ஏனைய பயணிகளைவிடத் தம்மை அதிக கெடுபிடிகளுடன் சோதனையிட்டதாகவும், நீர் தமிழனா? சிங்களவனா? எனக் கேட்டதுடன், தான் சட்டத்தரணி என அடையாள அட்டையைக் காட்டியபோதும, அவர்கள் அதனைப் பொருட்படுத்தாது இதுபோன்ற கெடுபிடிகளைத் தொடர்ந்ததாகவும் முறைப்பாடு செய்துள்ள இவர், இதுவொரு அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும் என மனித உரிமை ஆணைக் குழுவில் புகார் செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் - ஜூன் 5 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இவ்விசாரணைக்குச் சம்பந்தப்பட்ட இராணுவதினரைச் சமூகமளிக்கும்படியும், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

(சு,ரா)

# நாய்கள் தொல்லை

(புத்தூர்)

யாழ். வலயக் கல்வித் திணைக்கள வளாகத்தில், கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இதனால், அலுவலகத்திற்குக் கடமைக்கு வரும் ஊழியர்களும், பொதுமக்களும் நாய்க்கடிக்கு உள்ளாகி வருகின்றனர். இது விடயத்தில், மாநகரசபை ஊழியர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

# அடையாள அட்டைகளைப் பெறுமாறு யாழ். பொலிஸார் அறிவித்துள்ளனர்

பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி அடையான அட்டைகள், யாழ். பொலிஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்புப் பிரிவிலே ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

டானியல் அற்புதராசா மெக்லண்ட் (சாவகச்சேரி), சிவநாதன் சந்திரவதனன் (யாழ்ப்பாணம்), பொன்னையா கசிதா (தருமபுரம் கிழக்கு), சிற்றம்பலம் நல்லம்மா (யாழ்ப்பாணம்), கோவிந்தசாமி வேல்நாதன் (அரியாலை), கந்தையா சந்திரசேகரா (யாழ்ப்பாணம்), அருளம்பலம் சிவபாலன் (காரைநகர்), சிவக்கொழுந்து நாகராசா (மட்டுவில்), சீவரெத்தினம் மணிபல்லவன் (கொட்டடி), தர்மலிங்கம் இரத்தினராசா (புங்குடுதீவு), நவரெத்தினம் ஆறுமுகசாமி (பிரான்பற்று), தருமலிங்கம் ரவீந்திரன் (கோண்டாவில்), தர்மராஜா நிலோஜன் (கொக்குவில்), விசுவநாதன் தணிகாசலம் (புத்தூர்), கணபதிப்பிள்ளை செல்லத்துரை (ஆவரங்கால் மேற்கு), சின்னையா நாகரத்தினம் (நல்லூர்), சிற்றம்பலம் நல்லம்மா (புலோலி வடகிழக்கு), சின்னத்தம்பி சுதாகரன் (ஓட்டுமடம்), சரவணமுத்து கனகசபை (மல்லாகம்), குமரேசு பொன்னையா கனகலிங்கம் (கொட்டடி), சின்னராசா சதீஸ்வரன் (வண்ணார்பண்ணை) ஆகியோரின் அடையாள அட்டைகளே ஒப்படைக்கப்பட்டுள்ளன. (சு)

# கலாசார பேரவையின் வருடாந்த இசை விழா!

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் வருடாந்த இசைவிழா நாளை ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் நடாத்தப்படவிருக்கும் இவ்விழாவில், இசை நிகழ்ச்சிகள், நாடகம் மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

தொல்புரம் - வடக்கம்பரை அம்மன் ஆலய மைதானத்திலுள்ள, மோகன் அரங்கில் நடைபெறவுள்ள இவ்விழாவில் - பெருமளவு கலைஞர்களும், கலாரசிகர்களும் ஒன்றுகூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வெடிக்காத ஷெல் மீட்பு

நெல்லியடிப் பகுதியில் தோட்டம் ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனைப் படையினர் கடந்த திங்கட்கிழமை வெடிக்கவைத்தனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்குக் கிழக்குப் பகுதியில் நீண்டகாலமாகப் பயிர்ச்செய்கை நடைபெறாதிருந்த நிலத்தைப் பயிர்ச்செய்கைக்காகத் திருத்தியபோதே, இந்த ஷெல் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக இராணுவத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அப்பகுதிக்கு வந்த படையினர் அதனைப் பாதுகாப்பான முறையில் வெடிக்கவைத்தனர்.

(116,13)

# மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத ஒருவர் உறுப்பினராக முடியாது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடாத ஒருவரை, மாகாணசபை உறுப்பினராக நியமிப்பது, மாகாணசபைத் தேர்தல் சட்டத்துக்கு விரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத சமரவீர வீரவன்னியைப் பொதுஜன ஐக்கிய முன்னணி, மாகாணசபை உறுப்பினராக நியமிக்கும்படி, கடந்த ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலையும் உயர் நீதிமன்றம் ரத்துச்செய்துள்ளது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, றொகான் எதிரிசிங்க ஆகியோர் - இது சம்பந்தமாகத் தாக்கல் செய்த மனுவை ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது. பின்னர், அவர்கள் உயர் நீதிமன்றத்தில் விசேட மனு ஒன்றைத தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பைப் புறக்கணித்து மனுமீதான விசாரணையை மேற்கொண்டது.

தேர்தல் ஆணையாளர் மாகாணசபைச் சட்டத்துக்கு முரணாக நடந்துள்ளார் என்று தீர்மானித்திருக்கும் உயர் நீதிமன்றம், வேட்பாளர்களுக்காக வாக்களித்த வாக்காளர்களை அல்லது ஆட்சியை இந்த நடவடிக்கை பாதிக்கும் என்று கூறியுள்ளது.

நீதிபதிகள் - மார்க் பெர்னாண்டோ, டி.பி.எஸ.குணசேகர, சி.வி.விக்னேஸ்வரன் ஆகிய நீதிபதிகளே இந்தத் தீர்ப்பை வழங்கினார்கள்.

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு, தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை மறுதினத்துக்கு முன்னர், தமது விண்ணப்பங்களை, தீவகக் கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஒன்பதாவது அகவையில்

பெயர் : யோ.பானுகோபன்,
முகவரி: தம்பசிட்டி, பருத்தித்துறை.



ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.கிருஷன்
முகவரி: நாவற்காடு, வரணி.

பத்தாவது அகவையில்

பெயர் : சி.மனோஜிதன்
முகவரி: கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

## உழைப்போம் உயர்வோம்!
## தொழில் மலர்

# பெரும் மரங்களை சிறுசாடியில் வளர்க்கும் 'பொன்சாய்' முறை

சிறுசாடியில் பெருமரம் வளர்க்கும் தொழிநுட்பமானது 'Bonsai' என ஜப்பானிய மொழியில் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது.



Bonsai என்பது, ஒரு சிறப்பு வாய்ந்த பூந் தோட்டக்கலையாகும். Bonsai இன் பிறப்பிடமான சீனாவில், இதனை 'Punsai' என்றே அழைத்தனர். சீனாவிலிருந்து ஜப்பானிற்கு 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு, அங்கு அதன் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்தது. 19 ஆம் நூற்றாண்டளவில் உலகின் ஏனைய பகுதியும், Bonsai இன் தொழிநுட்பம் பற்றி அறிந்து கொண்டனர்.

Bonsai தாவரம் நகரங்களிலுள்ள வீடுகளில் மொட்டை மாடிகளிலும், படிக்கட்டுகளிலும், கூரைகளிலும், சாடிகளில் வைத்து வளர்க்கப்படுகிறது. இதற்கென விசேடமான பச்சை வீடுகளோ, தரமான உரவகைகளோ, சிறப்பான ஆயுத வகைகளோ தேவையில்லை. பூந்தோட்டக் கலைஞர்களின் அழகுணர்ச்சியைப் பொறுத்து, Bonsai இன் பராமரித்தல் முறை வேறுபடும். அத்துடன், பொதுவான பூந்தோட்டக் கலையிலிருந்து சற்று வேறுபட்டு ஒரு பகட்டை இது வெளிப்படுத்துகின்றது. இச்சிறப்புக் கலையினை "இயற்கையின் உருக்கல்" (Fusion of the Nature) என்று அழைத்தால் அது மிகையாகாது. வெற்றிகரமான ஒரு Bonsai ஐ உருவாக்குவதற்குக் கலைத்துவமான திறமை மட்டுமல்ல, பொறுமையோடு கூடிய நிம்மதியான மனமும் சேரவேண்டும். இதன் உருவாக்கம் தொடக்கத்துடன் மட்டும் திருப்தி அடையமுடியாது. Bonsai இன் தனித்துவம் என்னவென்றால், அது வளரும் காலத்துடன் தொடர்புடையது.

பெருமரத்தைக் குட்டைத் தாவரமாக வளர்கும் இக்கலையானது, இருவித்திலைத் தாவரங்களுக்கு மட்டுமே பொருந்தும். ஒழுங்கான கத்தரிப்பு முறையான பராமரிப்பு மூலம், ஒரு மரத்தின் மிகச் சிறியளவிலுள்ள பிரதியை (Miniaturized Form) உருவாக்கலாம்.



இதன் தத்துவம் என்னவென்றால், பெரிய மரங்களைச் சிறியசாடிகளில் வளர்த்து, அவற்றின் வேரின் வளர்ச்சியை எல்லைப்படுத்துவதன் மூலம், தாவரத்திற்குக் கிடைக்கும் தாதுப்பொருட்களின் அளவை மட்டுப்படுத்தலாம். இத்தாவரம் தனக்கு அவசியமற்ற தாவரப்பகுதிகளை உதிர்த்து, தனக்கு மிகவும் அவசியமானவற்றை மட்டும் கொண்டிருப்பதால், உண்மையான அழகை மட்டும் பெரிதுபடுத்திக் காட்டும். நாங்கள் Bonsai தாவரத்தை உருவாக்கும்போது, இயற்கையின் ஒரு சரியான பிரதியை எடுப்பதில்தான் நமது வெற்றி தங்கியுள்ளது.

### எவ்வாறு Bonsai தாவரத்தை உருவாக்குவது?

மலைப்பிரதேசங்களிலும், கற்பாறை வெடிப்புக்கள், இடுக்குகள், பழைய மதில்கள் மற்றும் கிணற்றுச் சுவர்கள் போன்றவற்றில் இவ்வாறான தாவரத்தை அவதானிக்க முடியும். தாவரத்தின் அடிப்பகுதியிலுள்ள புற்களை முதலில் அகற்ற வேண்டும். பின்பு, அந்தத் தாவரத்தின் இயல்புகளை அவ்தானித்தல் வேண்டும். அதன்பின் கிளைகளையும் கத்தரிக்க வேண்டும். வேர்களில் சிலவற்றையும் வெட்டி அகற்றுதல் வேண்டும். Bonsai இற்கெனத் தெரிவுசெய்யும் தாவரத்தை, அதன் இயற்கை வாழ்விடத்திலிருந்து அகற்றுவதற்குச் சிறந்த முறை ஒன்று உள்ளது.

தாவரத்தின் சுற்று வட்டாரத்தின் விட்டத்தின் அரைப்பகுதிக்குத் தாவரத்தைச் சுற்றிவட்டமிடுக. வட்டத்தின் வழியே மண்ணை அகற்றியபின், தாவரத்தை நோக்கி மேலும் மண்ணை அகற்றவும். இறுதியாக ஆணிவேரை வெட்டவும். பின் பக்கவேர்களையும் வெட்டி, அப்படியே தாவரம் அகற்றப்படலாம். தாவரத்திலிருந்து நீர் இழக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தாவரம் முழுவதையும் பிளாஸ்ரிக் உறையினால் அல்லது பொலித்தீன் பையினால் கட்டவும்.

பிடுங்கிய தாவரத்தை விரைவில் நடுவது பொருத்தமானது. நடுவதற்கு முன் பொலித்தீன் உறையை அகற்றி - ஆணிவேரையும், பக்கவேரையும், குறுக்காகவும், சரிவாகவும் வெட்டுதல் வேண்டும்.

### எப்படி சிறு சாடியைத் தயார்ப்படுத்தல்?

சீனர்களின் கைவேலைப்பாட்டால், உருவாக்கப்பட்ட அலங்காரச் சிறுசாடிகளே மிகவும் பொருத்தமானது. ஆனால், அவை விலை உயர்ந்தவை. அதற்குப் பதிலாக - சீமெந்தினால் உருவாக்கப்பட்ட அல்லது களிமண் சாடிகளைப் பயன்படுத்தலாம். பொதுவாக - 5 - 7 செ.மீ. ஆழமான, 45 - 60 செ.மீ. விட்ட முடைய சதுரவடிவான அல்லது வட்டவடிவான அல்லது செவ்வக



வடிவான சாடி பொருத்தமானது. இச்சிறு சாடியானது, தாவரத்தின் அளவிற்கு ஏற்றவகையில் இருப்பது Bonsai இற்கு மேலும் அழகைக் கொடுக்கும் என்றும், பசுமையான தாவரங்களுககுச் செவ்வக அல்லது சதுர வடிவான சிறுசாடிகளும், இலையுதிர் தாவரங்களுக்கு நீள்வட்டவடிவான சிறுசாடிகளும் அழகூட்ட வல்லன. சிறுசாடியின் தெரிவு, Bonsai இன் வடிவத்தில் பெரிதும் தங்கியுள்ளது.

சிறுசாடியின் அடிப்பகுதியில் நீர் வழிநது ஓடுவதற்கு, வசதியாக ஒரு துவாரம் இருத்தல் வேண்டும். சாடியினுள் இடபபடும் கலவையானது, சம பகுதிகளைக் கொண்ட சிவப்பு மண், பண்ணைக்கழிவு/ கூட்டெரு, மணல் மண், உக்கிய தாவர இலைகள் கொண்டு ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். இக்கலவையை இடுவதற்கு முன்னர், சாடியின் அடிப்பகுதிக்குச் சிறிய ஓட்டுத் துண்டங்கள், கரித்துண்டுகள், செங்கட்டித் துண்டங்கள் இடல்வேண்டும். இதனால், நீர் வழிந்தோடும் தன்மையை அதிகரிக்கலாம். பின்பு, மண்கலவையை இட்டுச் சாடியை நிரப்புதல் வேண்டும். சிறு சாடியின் நடுப்பகுதியில் தெரிவுசெய்த தாவரத்தை நட்டபின்னர், தாவரத்தின் தண்டுப் பகுதியை நோக்கி, மண்கலவையைக் குவித்து விடுதல், Bonsai தாவரத்திற்குச் சிறந்த தோற்றத்தைக் கொடுக்கும். தாவரத்தினை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து - கடுமையான வெயில், காற்று என்பவற்றின் தாக்கத்திலிருந்து தடுப்பதற்காக நிழலூட்டப்படுதல் வேண்டும். நீரைத் தாவரத்தின் அடிக்கு ஊற்றாமல், தெளித்து விடுதல் நல்லது.

தாவரம் மீண்டும் உயிர்க்க ஒரு மாதம் அளவில் தேவைப்படலாம். நன்கு துளிர்த்த பின், புதிய துளிர்களைக் கிள்ளி விடுவதன் மூலம், குறுகிய கிளைகள் உருவாக வழிவகுக்கும். தாவரம் முழங்கால் உயரம்வரை வளர்வதற்குப் பல வருடங்கள் எடுக்கும்.

(அடுத்தவாரம் தொடரும்...)

ஆக்கம்
சத்தியவாணி கனகசிங்கம்
உதவி விரிவுரையாளர், பயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
தருவது:-
தகவல் தொடர்பு மையம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 40/= | 40/= | 30/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 70/= | 65/= | 80/= |
| கத்தரிக்காய் | 70/= | 50/= | 50/= | 50/= | 70/= |
| பாகற்காய் | 80/= | 60/= | 60/= | 60/= | 80/= |
| வெண்டிக்காய் | 50/= | 20/= | 20/= | * | 20/= |
| கரட் | 70/= | 80/= | 40/= | 60/= | 40/= |
| பீற்றூட் | 50/= | 60/= | 30/= | 40/= | 25/= |
| வெங்காயம் | 50/= | 50/= | 40/= | 50/= | 60/= |
| பச்சைமிளகாய் | 40/= | 80/= | 25/= | 60/= | 40/= |

# தொழில் வங்கி







| நிறுவனம் | WORLD VISION கிறிஸ்தவ மனிதநேய அமைப்பு | EMACE SRILANKA | OXFAM | DANISH REFUGEE Council (வவுனியா) | சிறுவர் பாதுகாப்புத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | சிரேஷ்ட திட்ட அமைப்பாளர் | திட்ட அலுவலர் | திட்ட உதவியாளர் (திருகோணமலை) | சட்ட உத்தியோகத்தர் (வவுனியா) | கள இணைப்பாளர் |
| அடிப்படைத் தகுதிகள் | நிதியியல் பட்டதாரி | சமூக விஞ்ஞான, விவசாய, பட்டதாரி | குறைந்தது க.பொ.த. உயர்தரம் | சட்டமானி மற்றும் சமூக விஞ்ஞான பட்டதாரிகள். | பட்டதாரிகள் |
| விண்ணப்ப முடிவுத் திகதி | 05.06.2003. | 03.06.2003. | 05.06.2003. | 06.06.2003. | 11.06.2003. |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# கடற்றொழிலில் முன்னரைப் போன்று இப்போது வருமானம்பெற முடியவில்லை

**வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் - கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நமது ஈழநாட்டுக்கு அளித்த நேர்காணல்.**

**கேள்வி:** தற்போதைய நிலையில் கடற்தொழில் செய்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்துக் கூறுவீர்களா?

**பதில்:** இப்போது சூறைக்காற்றுக் கடுமையாக வீசிக்கொண்டிருக்கின்ற காலம். இது புரட்டாதி மாதம் வரை நீடிக்கும். முன்னர், இக்கால கட்டத்தில் யாழ். கரையோரப் பகுதி மீனவர்கள் அனைவரும், சற்று இடம் பெயர்ந்து மன்னார், ஊர்காவற்துறை ஆகிய இடங்களிலுள்ள கடற்பிரதேசங்களில்தான் தொழிலுக்குச் செல்வார்கள். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறு தொழில் செய்வது கடினம்.

இதேவேளை - வடகரையிலுள்ள தொண்டமனாறு பகுதியில் மட்டும் இக்கால கட்டத்தில் தொழில் செய்யக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

**கேள்வி:** இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் ஏற்படும் உடனடி மற்றும் நீண்டகாலப் பாதிப்புக்கள் குறித்துக் கூற முடியுமா?

**பதில்:** இந்திய மீனவர்களின் அத்துமீறல், இக்காலச் சூழ்நிலையில் மட்டுமல்ல, எப்போதுமே எமக்குப் பெரும் பாதிப்பாகத்தான் உள்ளது. இந்திய மீனவர்களின் வருகைக்குப் பிறகு, அதாவது அவர்கள் வந்து எமது வளங்களைச் சுரண்டத் தொடங்கிய பின்னர், எங்களுடைய மீன்பிடித்தொழிலின் வருமானம், மீன் உற்பத்தி என்பன மிகவும் குறைவடைந்த நிலையிலேயே உள்ளன.

கடற்தொழிலில் ஓரளவு அனுபவம் உள்ள தொழிலாளி என்ற வகையில், என்னைப் பொறுத்தவரையில் - நாம் 1985 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாம் இருந்த நிலைமை மற்றும் நாம் பெற்ற வருமானத்தை இப்பொழுது பெறமுடியாதுள்ளது என்பது உண்மை. மன்னார் கடற்பரப்பிலிருந்து, முல்லைத்தீவு கடற்பகுதிவரை உள்ள கடற்பிரதேசங்களிலுள்ள வளம், இந்திய மீனவர்களால் சுரண்டப்பட்டமையே இதற்குக் காரணமாகும். குறிப்பாக இப்பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால், எமது மீன்பிடி உபகரணங்கள் மற்றும் தொழில் வளங்கள் யாவும் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றினால் மீனவர்களின் வருமானம் மிகவும் மோசமாகக் குறைந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மேலும் நீடிக்கவிட்டோமானால், வடபகுதி மீனவர் தொழில் நடத்துவதற்கு வழியற்றவர்களாக மாறும்நிலை உருவாகும். வறுமையில் வாடவேண்டி ஏற்படும்.

**கேள்வி:** ஏ-9 வீதி திறக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்துவிட்ட பின்னர், எமது கடற்பகுதியில் பிடிக்கப்படும் மீன் மற்றும் கடல் உணவுகளும தென்பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவதால், எமது பகுதி மக்களுக்கு ஏதாவது பாதிப்புக்கள் உள்ளதா?

**பதில்:** உற்பத்தி அதிகரித்தால், அதற்கு ஏற்றதாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் அதிகரிக்கப்படவேண்டும் என்பது உண்மை. எமது தேவைக்கும் மேலாக மீன்கள் தற்போது பிடிக்கப்பட்டுவருகின்றன. ஆனால், தற்போது யாழ். கரையோரப் பகுதியில் காற்று வீசுவதால், மீன் உற்பத்தி சற்றுக் குறைவாக உள்ளது. எனினும், தீவுப்பகுதிகளில் கூடுதலாக மீன் பிடிக்கப்படுகின்றது. ஆகவே, இந்த உற்பத்திகளையும் சந்தைப்படுத்தத்தான் வேண்டும்.

எனினும், சந்தைப்படுத்தல்களில் சரியான முறைகள் இன்னமும் பின்பற்றப்படவில்லை. இதற்குக் காரணம் உரிய வசதிகள், வாய்ப்புக்கள் இல்லை என்பதாகும். உதாரணமாக, மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஐஸ்கட்டி கட்டாயம் தேவை. ஆனால், யாழ். மாவட்டத்தில் ஐஸ்கட்டி உற்பத்திசெய்யப்படுதில்லை.

அடுத்து, முன்பிருந்த லொறிப் போக்குவரத்து தற்போது இல்லை. இப்போது ஏ-9 வீதியால் போக்குவரத்து இடம்பெற்றாலும்



பல தடங்கல்கள் உண்டு. குறிப்பாக - காலையிலிருந்து மாலைவரையுமே இப்பாதையைப் பாவிக்கமுடியும். இதனால், இரவு வேளைகளில் மீன்களைச் சந்தைப்படுத்த முடியாது. அத்துடன், பல இடங்களில் மீன்களை இறக்கியேற்றுவதால், மீன்களும் பழுதடைந்து விடுகின்றன.

எனவே, மீன்களை உள்ளூரில் குறைந்த விலையில் விற்பனை செய்தால்கூட, இலாபகரமாக இருக்கும்.

**கேள்வி:** கடந்தகால யுத்தத்தினால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவிகள் செய்திருக்கின்றதா?

**பதில்:** நிச்சயமாக இக்கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும். ஏனெனில், கடற்தொழிலோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட பல குடும்பங்கள் இங்கிருக்கின்றனர். இக்குடும்பங்கள் அனுபவித்த இழப்புக்களை வார்த்தைகளால் சொல்லமுடியாது. குறிப்பாக - வான், கடல், தரை ஆகிய தாக்குதல்களினால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வாழ்விழந்து, வாழ வழியிழந்து இருக்கின்றார்கள். எனக்குத் தெரிந்தவரை இன்றுவரை இக்குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் ஒருரூபா காசுகூட வழங்கப்படவில்லை.

பல அரசசார்பற்ற நிறுவனங்கள், கடற்தொழிலாளர்கள் மீது இரக்கப்பட்டு வலைகளையும், கட்டுமரங்களையும் கடனாகக் கொடுத்து இருக்கின்றன. இதை இந்நிறுவனங்கள் பரவலாக செய்துள்ளன. இப்போதும் இவர்களின் உதவி பயனுள்ளதாக அமைந்து வருகின்றது.

**கேள்வி:** கடற்தொழில் சங்கங்க... சமாசத் தலைவராக நீங்கள் இருப்பத... கடற்தொழில் சங்கங்களின் சமாசத்... நடவடிக்கைகள் குறித்துக் கூறமுடியு...

**பதில்:** யாழ். மாவட்டத்தில் எழு... கடற்தொழிலாளர் சங்கங்கள் இயங்... கொண்டு வருகின்றன. இவை கிர... மட்டங்களில் உள்ளன. இவற்றை... கண்காணிப்பதற்குப் பிரதேச செயலா... மட்டத்தில் ஓர் சங்கம் உள்ளது. இ... றுக்கும் மேல் வடமாகாண கடற்தொ... லாளர் சங்கங்களின் சமாசம் உள்ள... பொது வாகச் சங்கங்களோ, சமாசங்கே... நிதி வசதிகள் அற்றநிலையில்தா... இயங்கி வருகின்றன.

இதனால், மீனவர்கள்படும் கஷ்ட... தினை இச்சங்கங்களாலோ, சமாசத்தாலே... பெரியளவில் தீர்த்து வைக்கக்கூடிய வச... கள் இல்லை. இருந்தாலும்கூட அண்மை... யில் இடம்பெற்ற சூறாவளியினால் மாதகல... கடற்பகுதியில் பதினைந்து மீன் பிடிப்பட... கள் அடிபட்டுச் சேதமடைந்தபோது எம... மால் சிறியளவிலாயினும் உதவமுடிந்தது.

இச் சேதம் குறித்துப் பல திணைக்களங்களுக்கும், அமைச்சுகளுக்கும் தெரியப்படுத்தியும், எந்த உதவியும் கிடைக்கவில்லை. எமது சமாசத்திடம் நிதி இல்லாவிடினும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செலான் வங்கியினருடன் தொடர்புகொண்டு - அவர்களில் பத்துப் பேருக்கு, தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவருக்கு படகு ஒன்றைக் கடனாகப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது.

எமது சமாசத்திற்கு அரசாங்கத்திடமிருந்தோ, வேறு நிறுவனங்களிடமிருந்தோ பெரியளவிலான நிதியுதவிகள் எதுவும் கிடைப்பதில்லை. எனினும், பல அரச சார்பற்ற நிறுவனங்கள் எமக்கு உதவி செய்ய முன்வந்தமைக்கு, நாம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம். எமது சமாசம் தன்னால் இயன்றளவு, மீனவர்களுக்குத் தொடர்ந்தும் தனது சேவையைச் செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**நேர்காணல்**
**லிவிங்ஸ்டன்**

# புல்லைச் சேமிக்கும் முறைகள்

இலங்கையில் வருடம் முழுவதிலும் காணப்படுகின்ற பல்வேறு காலநிலைகளினால், பசும்புல் உற்பத்தி காலநிலைகளுக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. இப்படியான மாறுபட்ட புல் உற்பத்தியினால், மழைகூடிய காலங்களில் காணப்



படும் புல்லின் அளவு - கால்நடைகளின் தேவைக்கு அதிகமாகவும், வறட்சியான காலங்களில் காணப்படும் புல், கால்நடைகளின் தேவைக்குக் குறைவாகவும் இருக்கிறது. இப்படியான மழைகூடிய காலங்களில் காணப்படுகின்ற தேவைக்கதிகமான புல்லை, தகுந்த பாதுகாப்பு முறைகளில் சேமித்து வைப்பதன்மூலம், புல் பற்றாக்குறை நிலவும் காலங்களில் உபயோகிக்கக்கூடியதாக இருக்கிறது.

கால்நடைகளுக்கு ஊட்டப்படும் மேய்சல் புல்வகைகளையும் - புல்லும், அவரையினப் பயிர்களும் கலந்த கலவைகளையும், நேப்பியர் புல்லையும், கலப்பின நேப்பியர் என்பி 21 புல்லையும், இறுங்கு, சோளம் போன்ற வெட்டுத்தீவன வகைகளையும், உலர் புல் (Hay) செயற்கையாகக் காயப்பண்ணப்பட்ட காய்ந்தபுல் (Dried grass), குழிகாப்புத்தீன் (Silage) போன்றவைகளாக மாற்றிச் சேமித்து வைக்கமுடியும்.

உலர்புல், செயற்கையாகவே காயப் பண்ணப்பட்ட புல் ஆகியவற்றில் 15 வீதத்திற்குக் குறைவாகவே நீர்ப்பற்றுக் காணப்படுவதனால் - பங்கஸ், பக்றீரியா போன்றவற்றின் தாக்கங்களுக்கு உட்படாமல், இவற்றைச் சேமித்து வைக்கமுடிகிறது. குழிகாப்புத்தீன் தயாரிப்பின்போதும் சேதன அமிலங்கள் உண்டாவதால் - இவற்றில் பங்கஸ், பக்றீரியா போன்றவற்றின் தாக்கங்கள் ஏற்படுவது இல்லை.

### ❑ உலர்புல் தயாரித்தல் (Hay)

புதிதாக வெட்டப்பட்ட புல்லில், சராசரியாக 80 வீதம் நீர்ப்பற்றுக் காணப்படும். உலர்புல் தயாரிப்பதற்குப் புல்லிலுள்ள நீர்ப்பற்றை 14 - 16 வீதமாகக் குறைக்க வேண்டும். இக்குறைப்பைச் சூரிய வெப்பம் மூலமோ அல்லது காற்றின் மூலமோ செய்யலாம். இதனால், மிகவும் மழைகூடிய காலங்களில், உலர்புல் தயாரிப்பது மிகவும் கஷ்டமானதாகும். மழைகூடிய காலங்களில் தயாரித்தால், அவற்றின் போஷணைத் தன்மை மிகவும் குறைவாகக் காணப்படும்.

புல்லை உலரவிடும்போது, அதன் நீர்ப்பற்றை விரைவாக வெளியேற்றுவதற்காகப் புரட்டிப் புரட்டிக் காயவிடல்வேண்டும். இப்படிக் காயவிடும்போது, மேலதிக மழையில் நனையாமலும், மேலதிக வெயிலினால் வெளிறிப் போஷணைச் சத்துக்குறையாமலும், பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அத்தோடு, தண்டுகளிலும் பார்க்க இலைகளில் கூடுதலான போஷாக்குச் சத்துகள் காணப்படுவதால், அவை அதிகம் வெப்பமேறி நன்றாகக் காய்ந்து பக்குவப்படுத்தும்போது, நொருங்கிப் பழுதடையாமல், பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதேபோல், நன்றாகக் காய முன்னும் இதனைச் சேமித்தால், நீர்ப்பற்றுக் கூடி, சிதைவடையத் தொடங்கிச் சேமிக்கக் கூடிய புரதத்தின் அளவு குறைவடைகிறது.

வறண்ட வலயத்தில் வடகீழ்ப்பருவப் பெயர்ச்சி மழை முடியும். மாசிமாதப் பகுதி உலர்புல் தயாரிப்பதற்கு உகந்த காலமாகும். இதற்கு, புல்லை அரிவாள் மூலமோ அல்லது வெட்டும் இயந்திரங்கள் (Mower) மூலமோ வெட்டி எடுக்கலாம். வெட்டியபின் போதியளவு உலர்வதற்கு, 24 - 30 மணித்தியாலங்கள் அப்படியே வயலில் விடவேண்டும். போதியளவிற்குப் புல் உலர்ந்துள்ளதா என்று பார்ப்பதற்குப் புல்லை நீளமாகக் கையில் எடுத்துக் கசக்கி, மடித்துப் பார்க்கும்போது-நீர் கசியாமல் இருந்தால் நன்றாகக் காய்ந்ததற்கு அறிகுறியாகும். மேலதிகமாகக் காய்ந்தால் புல்லை மடிக்கும்போது முறியும். பெரிய பரப்பளவில் செய்வதாயின் - புல்லை இயந்திரங்களினால் வெட்டி, காயவிட்டு இயந்திரங்களினால் கோலியெடுத்து (Buckrake), இயந்திரங்களினால் கட்டுக்களாகக் கட்டி (Bales), பின் அவற்றை மழை படாது அறைகளில் சேமித்து வைக்க வேண்டும்.

### ❑ உலர் புல்லின் தரம்

உலர்புல் தயாரிக்கும்போது, அவற்றை வெட்டி முடிந்தளவு விரைவில் அதிக வெயிலாலும், மழையினாலும் சேதமுறாதவாறு உலரப்பண்ணி எடுக்கவேண்டும். எப்பொழுதும் உலர்புல் தயாரிப்பதற்குப் புல் நன்கு முதிர முன்னர் அறுவடை செய்யவேண்டும். புல் முதிரமுன், அவை கொண்டுள்ள சமிபாடு அடையக்கூடிய புரத்தின் அளவு குறைகிறது. அதனால், சாதாரணமாக எப்புல் வகைகளையும் சேமிப்புக்காக அறுவடை செய்யும்போது, மழைகூடிய காலங்களில் 4 வார இடைவெளியிலும், மழை குறைவான நாட்களில் 6 வார இடைவெளிகளிலும் அறுவடை செய்யலாம். புல்லின் அறுவடைக்காலம் எவ்வளவு முக்கியமோ, அவ்வாறே சீதோஷ்ண நிலையும் முக்கியமாகும். காலநிலையையும், பயிரின் நிலைமையையும் கவனத்திற்கொண்டு அறுவடையையும், பதப்படுத்தலையும் செய்தல் வேணடும். இவை போதியளவு காய்ந்தபின் ஒன்று சேர்த்து எடுத்து இயந்திரங்கள் மூலமோ, கையாலோ - 56 இறாத்தல் கொண்ட கட்டுக்களாகக் கட்டி மழைபடாத வண்ணம் அறைகளில் சேமிக்கலாம்.

### ❑ காய்ந்த புல் (Dried Grass)

இம்முறையில் புற்கள் இயந்திரங்களால் காயப்பண்ணப்படுகிறது. இந்த இயந்திரங்கள் மின்சாரத்தால் இயக்கப்படுகிறது. இவற்றின் உட்பகுதியில், காற்றுச் செல்லக்கூடிய தட்டுக்கள் அடுக்கடுக்காக இருக்கும். அதிலும் - புற்களை வெட்டியவுடன் நிரப்பி, 80°C வெப்பநிலையில் காயவிடலாம். இதனுள் வெப்பமேறிய காற்றுச் சுழல்வதன் மூலம் புல் காயப் பண்ணப்படுகிறது.

தருவது:-
**தகவல் தொடர்பு மையம்,**
**விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## தோற்றப்பாடும், தெளிவும்!

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் - இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையாக அதனை நோக்காது - இராணுவ நலனோடு இந்த விவகாரத்தைத் தொடர்புபடுத்தி, இந்திய இராணுவ நிபுணரின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்ட அரசாங்கம் - தற்போது அதில் சம்பந்தப்பட்ட ஜெனரல் சதீஷ் நம்பியாரோடு, இன்னும் சில இந்திய படையதிகாரிகளையும் இணைத்துக் கொண்டுள்ளது.

இந்தவகையில் - யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு இந்திய இராணுவ உயரதிகாரிகளின் குழுவொன்று கடந்த செவ்வாயன்று நேரடியாக விஜயம் செய்திருக்கிறது. தனியே உயர் பாதுகாப்பு வலயங்களிளென்றில்லாமல் - யாழ்.நகர்ப் பகுதிகளுக்கும் இந்தக குழுவினர் விஜயம் செய்து, பாதுகாப்பு நிலைவரத்தைப் பார்வையிட்டு, கலந்துரையாடிச் சென்றிருக்கின்றனர்.

இலங்கை விவகாரத்தில், படையினரின் செயற்பாடுகளில் - இந்தியத் தரப்பின் செல்வாக்கு அண்மைக் காலமாக குறிப்பிடத்தக்கதாகவே அமைந்து வருகின்றது. உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் - ஜெனரல் சதீஷ் நம்பியாரும், கடற் கண்காணிப்பு விடயங்களில் இந்தியக் கடற்படையினரும், தெற்கில் வெள்ள நிவாரணப் பணிகளில் இந்திய இராணுவத்தினருமெனத் தொடரும் நடவடிக்கைகளின் அண்மைய செயற்பாடாக, இந்திய இராணுவ அதிகாரிகளின் யாழ்.விஜயம் அமைந்திருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையில் - அமைதிகாப்புப் படையென வந்து - ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களைக் கொன்றொழித்தும் இன்னும் பல கொடூரங்களை விளைவித்தும் - ஈழத்தமிழர் வரலாற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய இந்தியாவின் படை நடவடிக்கைகள், அந்நாட்டின் படைகள் இலங்கைத் தீவை விட்டகன்றதும் வெகுவாகக் குறைந்திருந்தன.

அதற்குப்பின், நேரடியாக இராணுவத் தலையீடுகளைச் செய்வதில் இந்தியா ஆர்வம் காட்டாத நிலையே அண்மைக் காலம் வரை நிலவி வந்தது. ஆனால், மிக முக்கிய சந்தர்ப்பங்களில் இந்தியா தனது இராணுவ - கடற்படை உதவிகளை இலங்கை அரசாங்கப் படையினருக்கு அளித்ததும், விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான நகர்வுகள், படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகையில், தனது அழுத்தங்களைப் பிரயோகிக்க அந்நாடு முனைந்ததும் நடந்தேறியே வந்தது.

ஒப்புக்காக, இலங்கை விவகாரத்திலிருந்து தான் ஒதுங்கிக்கொண்டதாக இந்தியா வெளியே தெரிவித்துக் கொண்டாலும் - தனது பிராந்திய நலனில் கொண்ட அக்கறையும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்போக்கும் - இந்தியாவின் மறைமுக நடவடிக்கைகளாகத் தொடர்ந்ததை மறுக்கமுடியாது.

ஆனால் - இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும அரசியல் முயற்சிகள், சர்வதேசத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டபோது, தாம் ஓரங்கட்டப்பட்டுவிட்டதாகவே இந்தியா கருதியது. நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளின்பால் அதிருப்தி கொண்டதாகவே இந்தியாவின் எதிர்வினைகள் வெளிக்கிளம்பின.

ஆனால் - உயர்பாதுகாப்பு வலய விவகாரம் சூடுபிடித்ததும், இது தொடர்பான ஆலோசனைக்கு இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் சதீஷ் நம்பியார் அழைக்கப்பட்டதும் - இந்தியாவின் நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றதாகவே அரசியல் அவதானிகள் கருதத் தொடங்கினர்.

இலங்கை கடற்பரப்பின் 'இறைமையையும், ஆதிபத்தியத்தையும' தம்வசம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்த இலங்கைக் கடற்படை, இந்தியாவின் உதவியைக் கோரியதும் - இதற்கு - பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி உட்பட தென்னிலங்கையின் முக்கிய அரசியல் சக்திகள் ஆதரவு தந்ததும் - இந்தியாவின் படையியல் ரீதியான செல்வாக்கு மீண்டும் தலைதூக்கத் தொடங்கியதாகவே உணரப்பட்டது.

இந்தப் போக்கின் ஓர் உயர்வு நிலையாகவே - தென்னிலங்கையில் பெரும் வெள்ள அழிவுகள் ஏற்பட்டதும் - நிவாரணப் பணிகளில், தன்னை முதலாவது நாடாக இந்தியா மிகத்துரிதமாக ஈடுபடுத்திக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

தனது கடற்படைக் கப்பலில் - உலங்குவானூர்திகளும், படையினருமாக இலங்கையில் - வெள்ள உதவிப் பணிகளில் இந்தியா ஈடுபட்டபோது - கப்பலில் வந்திருந்த உயர்படையதிகாரி ஒருவர் 'இந்தியா - இலங்கைக்கு எப்போதும், எவ்வேளையும் உதவத் தயாராயிருக்கிறது' எனத் தெரிவித்தார். கொழும்பு ஊடகங்களிலும் இந்தச் செய்தி முதன்மைப்படுத்தப்பட்டது.

இந்தவகையில் - வெள்ள உதவியின் வேகம் தணிய முன்பே, இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து சென்றிருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் -

இந்தத் தொடர் நிகழ்வுகள் - இந்தியா, தான் சொல்லிக்கொள்வதுபோல, வெறுமனே - இலங்கை விவகாரத்தில் பார்வையாளராகவோ அல்லது ஒதுங்கிக் கொண்டிருப்பதாகவோ காட்டிவரும் தோற்றப்பாடுகளுக்கு - முற்றிலும் வேறுபாடானது, ஆழ்ந்த கவனத்திற்குரியது என்பதையே இங்கு கருத்திலெடுக்க வேண்டியிருக்கிறது.

# இம்தியாஸ் மீது கடும் நடவடிக்கை; ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கிறார்!

தகவல் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மீது தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தேசிய லொத்தர்சபையைப் பொறுப்பேற்றது குறித்த வர்த்தமானி அறிவித்தலைப் பதிப்பிக்க வேண்டாம் என்று அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உத்தரவிட்டமை சட்டவிரோதமானது. இந்த உத்தரவை அவர் உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

இல்லையேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியநிலை உருவாகும். இது தொடர்பாக முன்னரும் கடிதம் எழுதியும் பதில் எதுவும் அனுப்பப்படவில்லை.

லொத்தர்சபையைக் கையேற்பதற்கு, நான் கொண்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் போதுமானது. அரசியலமைப்பின்படி நான் விரும்பினால் மட்டுமே, இது போன்ற பிரச்சினைகள் குறித்து பிரதமருடன் கலந்தாலோசனை செய்யவேண்டும்.

லொத்தர்சபையைக் கையேற்க நான் சுயமாகவே முடிவெடுத்தேன். இந்த முடிவையிட்டு நான் திருப்தி கொண்டுள்ளேன்.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்க, தகவல் தொடர்பு அமைச்சரின் ஆலோசனைகளோ, சிபார்சுகளோ எனக்குத் தேவையில்லை. நான் பிரசுரிக்குமாறு உத்தரவிடும் வர்த்தமானி அறிவித்தலைத் தடைசெய்யும் உரிமை எவருக்கும் இல்லை.

அவ்வாறு தடைசெய்வது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது. வர்த்தமானி மூலமே என்று முடிவை மக்கள் அறிந்து கொள்ளமுடியும்.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தனது உத்தரவை வாபஸ் பெறாவிட்டால், எனது நடவடிக்கை மிகவும் பாரதூரமானதாக அமையும் என்று ஜனாதிபதி சந்திரிகா தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வைத்தியரின் ஆலோசனையின்றி கண்நோய்க்கு மருந்திடுவது ஆபத்து

குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும் கண்நோய்க்கு மருத்துவ ஆலோசனையின்றி, தன்னிச்சையாக மருந்திடுதல் ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்று மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் பரவலாகக் கண்நோய் பரவிவருகின்றது. அண்மையில் பெய்த மழையும், தற்போது நிலவிவரும் கடும் வெப்பமும் இந்நோய் அதிகமாகப் பரவுவதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்நோய் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு ஏற்பட்டால், மற்றவர்களும் தொற்றுக்குள்ளாகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு இந்நோய்ககான சிகிச்சைகளைப் பெற நாளாந்தம் பெருமளவானோர் செல்கின்றனர்.

இதேவேளை, ஒரு சிலர் மருந்துக்கடைகளில் மருந்தைப் பெற்றுப் பயன்படுத்தி வருவதாகவும், தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி இவ்வாறு மருந்தைப் பயன்படுத்துவது பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## பெறுபேறு குறைந்த பாடசாலைகள் நேரடிக் கண்காணிப்பின் கீழ்!

(ஈச்சமோட்டை)

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வீழ்ச்சி அடைந்த பாடசாலைகளுள், 12 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு - அவை யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு, கல்வித் தரத்தினை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான - ஆசிரிய ஆளணி வளம் மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கு வேண்டிய வளங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்குரிய தீர்மானங்கள் - அண்மையில், யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (58)

# 4 மாதங்களில் 640 குடும்பங்கள் திருமலையில் மீளக்குடியமர்வு!

திருமலையில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 640 இடம்பெயர்ந்த குடும்பங்கள் - தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பியுள்ளன.

இவர்கள் வன்னியிலிருந்தும், ஏனைய மாவட்டங்களிலிருந்தும் சொந்த இடங்களில், பல வருடங்களின் பின் மீள்குடியமர்ந்திருக்கின்றனர்.

திருமலை நகரப்பகுதிக்கு 114 குடும்பங்களும், குச்சவெளிக்கு 302 குடும்பங்களும், கோமரங்கடவலப் பகுதிக்கு 91 குடும்பங்களும், பதவிசிறிபுர பகுதிக்கு 47 குடும்பங்களும், தம்பலகாமம் பகுதிக்கு 37 குடும்பங்களும், மூதூருக்கு 34 குடும்பங்களும், கிண்ணியாவுக்கு 124 குடும்பங்களும், ஈச்சிலம்பற்றைக்கு 3 குடும்பங்களும் மீள்குடியமர்வுக்காகத் திரும்பியுள்ளனர். இவர்களில் - 549 குடும்பங்கள் தமது சொந்த வீடுகளிலும், 72 குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், 19 குடும்பங்கள் அகதிமுகாம்களிலும் தற்போது தங்கியுள்ளன. திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை 12 அகதிமுகாம்களில் 1,216 குடும்பங்கள் இதுவரை தங்கிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்; விசாரணை நடத்த குழு அமைப்பு!

(கொழும்பு)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதிபதி ஒலிவர் பி.வீரசேன, ஊடகத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் ஜி.சந்திரராஜா ஆகியோரைக் கொண்ட இந்த விசேட விசாரணைக்குழு, எதிர்வரும் நான்காம் திகதி முதல் ஆறாம் திகதிவரை யாழ்.செயலகத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த விசாரணக்குச் சமூகமளிக்கும்படி மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, யாழ்ப்பாண ஊடகவியலாளர்களான வே.தவச்செல்வம், மனோகரராஜா, எல்.சிவபாலன் ஆகியோருக்கு அழைப்புவிடப்பட்டுள்ளது.

## இலங்கையின் ஏற்றுமதி வருமானம் கணிசமாக அதிகரிப்பு

**மத்திய வங்கி தகவல்**

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்தைவிட, அதிகரித்திருப்பதாக மத்தியவங்கி அறிவித்துள்ளது. கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் மார்ச் மாதம் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த வருடம் மார்ச் மாதம் ஏற்றுமதிமூலம் பெறப்பட்ட வருமானத்தைவிட, இவ்வருடம் மார்ச் மாதத்தில் 3 இலட்சத்து எழுபதாயிரம் டொலர்கள் அதிகமான வருமானம் கிடைத்துள்ளது.

இதேவேளை, விவசாயத்தின்மூலம் கிடைக்கும் வருமானம் இக்காலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்திருப்பதாகவும், மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் விவசாய உற்பத்திமூலம் கிடைத்த வருமானத்தைவிட, இவ்வருடம் 60 வீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்து லட்சம் ரூபா செலவில் வதிரியில் முதியோர் இல்லம்

வதிரி பரமானந்த ஆச்சிரமத்தில் - சமூகசேவை அமைச்சின் நிதியுதவியுடன் 10 இலட்சம் ரூபா செலவில், புதிய முதியோர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை, மிகவிரைவில் இந்து கலாசார அமைச்சர் திறந்து வைப்பார் என ஆச்சிரம அறங்காவலர்சபைத் தலைவர் டாக்டர் எஸ்.பரமநாதன் தெரிவித்தார். மேலும், அவர் தெரிவிக்கையில் - இங்கு 8 இலட்சம் ரூபாவில் புதிய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

பழைய முதியோர் இல்லம் 8 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (17)

## பீற்றர்ஸன், ஹெல்கிசனுடன் ஒஸ்லோவில் ஹக்கீம் பேச்சு

(ஒஸ்லோ)

நோர்வேக்குச் சென்றுள்ள துறைமுகங்கள், கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் - அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள், ரோக்கியோ மாநாடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நடாத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொலைபேசிமூலம் தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளை பாராட்டும் சிங்கள மக்களும் மக்களைச் சுரண்டும் அரசியல்வாதிகளும்!



தென்னிலங்கையில் அடைமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால், பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசு, உலக நாடுகளிடம் உதவிகோரி வருகின்றது. இந்த நிலையில், வடக்கில் சேகரிக்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருட்களை - தென்னிலங்கையில் பாதிககப்பட்ட மக்களுக்கு விடுதலைப் புலிகள் நேரடியாகக் கையளித்துள்ளார்கள். இவர்களது இந்த உதவிப்பணி பற்றித் தென்னிலங்கை மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். புலிகள் இவ்வளவு நல்லவர்களா, என வியக்கின்றார்கள் சிங்கள மக்கள்.

புலிகள் நிவாரணப் பொருட்களைத் தென்னிலங்கைக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, சிங்கள மக்கள் மத்தியில் மனமாற்றத்தைக் காணமுடிகின்றது.

புலிகள், பயங்கரவாதிகள் என்று கூறிவரும் ஜே.வி.பியினர் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றார்கள். அவர்கள் வகுத்த வியூகத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மனிதாபிமானம் முறியடித்துவிட்டது. சிங்கள மக்கள் மத்தியில் குற்றவுணர்வும் ஏற்பட்டுள்ளது. தமிழ்மக்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டபோது எதுவுமே செய்யவில்லை. அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து, குரல் கொடுக்கவும் இல்லையே என்ற வேதனையும் அவர்களிடம் காணமுடிகின்றது. விடுதலைப் புலிகள் தாமாக முன்வந்து பல இலட்சம் பெறுமதியான நிவாரணப்பொருட்களை நேரடியாக மக்களிடம் கையளித்தமையை, பல சிங்கள மக்கள் பாராட்டுகின்றார்கள். ஏன பாராட்டுகின்றார்கள் என நீங்கள் யோசிக்கலாம். நிவாரணப்பொருட்கள் வழங்குவதில்கூட ஊழல்கள் நிலவுகின்றன. அதுமட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணகள் வழங்கப்படவில்லை. வழங்கப்படும் நிவாரணங்களில்கூட ஒழுங்கான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. இப்படியான நேரத்தில், விடுதலைப் புலிகள் உண்மையாகவே பாதிககப்பட்ட மக்களிடம் நிவாரணப் பொருட்களைக் கையளித்துள்ளார்கள். அதனால், அவர்கள் பாராட்டைப் பெற்றார்கள்.

புலிகள், பயங்கரவாதிகள், இரக்கமற்றவர்கள் என்று கூக்குரல் இட்டுவரும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகள், புலிகளின் நடவடிக்கை



களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிங்கள மக்களிடம் இனத்துவேஷத்தை ஏற்படுத்திவரும் இவர்களின் செயற்பாட்டில் - புலிகளின் நடவடிக்கை, தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. தங்களுக்கு ஆபத்து நிவாரணப் பொருட்கள் வடிவில் வரும் என அவர்கள் நினைத்துப்பார்க்கவே இல்லை. இப்போது அவர்களால் என்ன செய்ய முடியும்? வெள்ளப்பெருக்கைத் திட்ட மட்டுமே முடியும்.

இது இவ்வாறிருக்க, வெள்ள நிவாரணப் பணிகளுக்கு உதவ இந்தியாவும் உடனடியாக முன்வந்துள்ளது. தனது நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அவசரப்பட்டு உதவ முன்வராத இந்தியா - இலங்கைக்குப் பாதிப்பு என்றவுடன் உடனடியாகவே வந்து களத்தில் இறங்கியுள்ளது. இதன் அரசியல் பின்னணியைச் சாதாரண பொதுமக்களால் புரிந்துகொள்ளமுடியாது.

இலங்கை, இன்று உலக அரங்கில் பரவலாகப் பேசப்படும் ஒரு நாடு. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மிகவும் முக்கிய நாடு. இன்று இந்த நாடுகளின் தலையீடு இலங்கையிலுள்ளது. இலங்கைக்குள் நுழையத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துச் சில நாடுகள் காத்திருந்தன. இலங்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு மிகுந்த வாய்ப்பாகிவிட்டது. போட்டி போட்டுப் பல நாடுகள் வெள்ள நிவாரணப் பணிக்கு உதவ முன்வந்துள்ளன. உதவிப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன.

இந்த நிவாரணப் பொருட்களை வழங்குவதில் மோசடி நிலவுவதாகப் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அரசியல்வாதிகள் தமது எதிர்கால அரசியல் வாழ்வைத் தக்க வைத்துக்கொள்வதற்காகவும், சுயவிளம்பரத்திற்காகவும், இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனராம். சில முக்கிய அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிவாரணப் பொருட்களை வழங்காமல், தமக்கு நம்பிக்கையான இடங்களில் பதுக்கியும் வைத்துள்ளதாக மக்களிடையே பேசப்படுகின்றது.

வெள்ளப்பெருக்கைச் சமூகவிரோதிகள் நன்கு பயன்படுத்தி வருகின்றார்கள். கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்களை மிரட்டி, நிவாரணப் பொருட்களைச் சேர்க்கின்றார்கள். சமூக விரோதிகளுக்குக்கூட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது என்ற ஏண்ணம் தோன்றுகின்றதா? எப்போது யுத்தம் வரும் என்று காத்திருப்பவர்களுக்கு இந்த வெள்ளப்பெருக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமல்லவா. சமூகசேவை என்று சொல்லிச் சொல்லியே பணத்



தைக் கறந்துவிட நல்ல சந்தர்ப்பமல்லவா? விடுவார்களா? காற்றுள்ளபோதே தூற்றத் தெரிந்தவர்களல்லவா?

நாடு முழுவதும் உள்ள சமூகவிரோதிகளும் நிவாரணப் பொருட்களைச் சேகரிப்பதில் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளார்களாம்.

இது இவ்விதமிருக்க, ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர் தமது ஆதரவாளர்கள் யார் என்று ஆராய்ந்து பார்த்தே, நிவாரணப் பொருட்களை வழங்கி வருகிறாராம். இந்தச் சம்பவம் இரத்தினபுரிப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இப்போது பல இடங்களில் பல சமூக நற்பணி மன்றங்கள் திடீரெனத் தோன்றியுள்ளன. மக்களிடம் நிவாரணப் பொருட்களை இவர்கள் சேகரிக்கின்றார்கள். அதன்பின் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றுக்குத் தகவல் அனுப்புகின்றார்கள். சுயவிளம்பரத்திற்காக இவர்கள் இப்படியான முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் சேர்க்கும் நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்த வழியும் இல்லை.

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என மூவினத்தவருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், நிவாரணப் பொருட்கள் வழங்கும்போதுகூட, இனவெறி தலைவிரித்தாடுகிறதாம். சிங்கள மக்களுக்கே கூடுதலான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றதாம். முஸ்லிம் நற்பணி மன்றங்கள் தங்களது முஸ்லிம் சகோதரர்களுக்குப் பள்ளிவாசல் ஊடாக நிவாரணப் பொருட்களைப் பங்கீடு செய்கின்றார்கள்.

தமிழ்மக்களுக்கு நிவாரணப் பொருட்களைப் போதுமான அளவு வழங்க எந்த அமைப்புக்களும் முன்வருவதாகத் தெரியவில்லை. கொழும்பிலுள்ள ஆலய தர்மகர்த்தாக்கள் இந்தியாவிலிருந்து பாடகர்களை, நடிகை, நடிகர்களை அழைத்துவந்து உபசரிப்பதில் காட்டும் அக்கறை, பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு உதவுவதில் காட்டுவதாகத் தெரிய



வில்லை.

ஒரு சில மன்றங்கள் இதயசுத்தியுடன் செயற்பட்டு வந்தாலும், அந்த மன்றங்களில் இருக்கும் விளம்பரப் பிரியர்களால் மன்ற நடவடிக்கைகள் திசைமாறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

கடந்தவாரம் கல்வி அமைச்சர் நிவாரண உதவிவழங்குவது தொடர்பாக, கொழும்பு மாவட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார். அக்கூட்டத்திற்கு கொழும்பு மாவட்டத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலை அதிபர்கள் வந்திருந்தனர். அவர்களிடம் கல்வி அமைச்சர், பாடசாலை ரீதியாக நிவாரணப் பொருட்களைச் சேகரித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## போகிற போக்கில்...

வழங்கியுள்ளீர்களா என்ற வினாவை எழுப்பினாராம். எந்தவொரு சிங்கள அதிபரும் நிவாரணப் பொருட்களைப் பாடசாலையூடாகச் சேகரிக்க முயற்சி செய்யவில்லையாம். ஆனால், கொழும்பு நகரிலுள்ள - சிக்காகோ நகரில் புகழ்பெற்ற உரையை ஆற்றிய மகானின் பெயரைக்கொண்ட தமிழ்ப் பாடசாலையின் அதிபர் மட்டும் எழுந்து, தனது பாடசாலை நிவாரணப்பொருட்களைச் சேகரித்து, பழைய மாணவர்கள் சங்கம் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைத்துள்ளது என்று கூறினாராம்.

சிங்களப் பாடசாலை அதிபர்கள் அமர்ந்திருந்த பக்கம் கல்வி அமைச்சர் திரும்பிப் பார்த்தாராம். அவரது பார்வையின் அர்த்தத்தைப் புரிந்த சிங்கள அதிபர்கள் தலைகுனிந்து அமர்ந்திருந்தார்களாம். முன்மாதிரியாகச் செயற்பட்ட தமிழ்ப் பாடசாலை அதிபரை கல்வி அமைச்சர் மனதாரப் பாராட்டினாராம். புத்தபகவானின் சிந்தனைகளைப் போற்றிப் பாதுகாக்கும் நாட்டில்தான் இவ்வாறான சம்பவங்களும் நடக்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இவ்வாறான சம்பவங்கள் வியப்பைத் தரக்கூடியவையல்ல.

இந்த வார ஆரம்பத்தில், அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கரு ஜெயசூரிய அதிர்ச்சியான தகவல் ஒன்றைத் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் விளைவாக தென்னிலங்கையில் பலர் மனநோயாளிகளாக மாறியிருப்பதாகவும், இவர்களுக்கு உதவ விசேட மருத்துவக் குழு ஒன்றையும் அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கால் மனநோயாளிகள் ஆக்கப்பட்டவர்களுக்கு விசேட சிகிச்சைகளை வழங்கி அவர்களை பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், கொடூர இராணுவ நடவடிக்கைகளினால் கண்முன்னே சொந்தங்கள் பலவற்றைக் கணப்பொழுதில் இழந்த, வடக்கு - கிழக்கு தமிழ்மக்களில் பலர் மனநோயாளிகளாக உள்ளார்கள். இவர்களைப் பற்றி அரசு என்றாவது சிந்தித்ததுண்டா என, வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிசெய்யும் வைத்தியர் ஒருவர் கேள்வி எழுப்புகின்றார்.

- உதரன்.



## விசேட பாதுகாப்புக் கோரும் தென்மாகாண சபை உறுப்பினர்கள்

(கொழும்பு)

தென்மாகாணசபை உறுப்பினர்கள், தமக்கு விசேட பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும், பொலிஸ் மா அதிபரையும் கோரியுள்ளனர்.

தென்மாகாண அமைச்சர் ரஞ்சித் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, தமக்கு மரண அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் - முன்னரே விசேட பாதுகாப்புக்கோரியுள்ளதாகவும் ஆனால், அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இந்தியத் துணை சபாநாயகர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

இந்திய நாடாளுமன்ற துணை சபாநாயகர் நஜ்மா ஹெப்துல்லா கொழும்பு வந்துள்ளார்.

இவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நட்புறவு ரீதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக இந்தியத் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் இந்தியா உதவியதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.

# எவரெஸ்ட் ஹெலி விபத்து; மூவர் பலி! பலர் காயம்!!

## மலையேறிகள் அச்சத்தினால் திரும்புகின்றனர்



எவரெஸ்ட் மலையடிவாரத்தில், நேற்று நடைபெற்ற ஹெலிகொப்ரர் விபத்தில், மூவர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர். எவரெஸ்ட் மலையில் - முதன் முதலாக மனிதன் ஏறிய 50 ஆவது பொன்விழா ஆண்டு, அங்கு விமரிசையாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

எவரெஸ்ட் மலையடிவாரத்திலுள்ள தங்குமிட முகாமில் ஹெலி தரையிறங்க முயன்றபோதே, அது விபத்துக்குள்ளானது.

இந்தக் ஹெலியில் - மலையேறிகள் குழுவொன்று நேபாளம் திரும்பிக்கொண்டிருந்தது. மலை முகட்டில் பெரும் பனிப்புகார் மத்தியில் சென்றுமறைந்த ஹெலி - மலையுடன் மோதிய பேரொலி மட்டுமே கேட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தரையிறங்க முற்பட்டபோது - ஹெலியின் கீழ்ப் பகுதி, கற்களினாலான தங்குமிடம் ஒன்றுடன் மோதியதாலேயே விபத்துக்குள்ளானதாக, நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில், காற்று மிக மெல்லிய கனமுடையதாக இருப்பதால் - ஹெலிகொப்ரர், விமானங்களைச் செலுத்துவது ஆபத்தான, கடினமான பணி எனத் தெரிவிக்கப் படுகின்றது. 50 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவுக்காக அங்கு தற்போது ஏராளமானவர்கள் கூடியிருப்பதால், தொடர்ந்து இத்தகைய விபத்துக்கள் நடைபெறக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. கடந்த புதனன்று இந்திய மலையேறி ஒருவர், பனிப்பாறைக்குள் வீழ்ந்து இறந்துள்ளார். இவரின் சடலம் நேற்று மலையிலிருந்து அடிவாரத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மலையேறுவதற்காகக் காத்திருந்த பலர், நேற்றைய விபத்தினால் அதிர்ச்சியடைந்துள்ளனர். இவர்கள் நேபாள இராணுவக் ஹெலிகள் மூலம் மீண்டும் காத்மண்டுவுக்குத் திரும்பத் திட்டமிட்டுள்ளனர்.



இஸ்ரேலியப் படையினர், மேற்குக் கரை நகரான துல்ஹாமில் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த பலஸ்தீனச் சிறுவனொருவன், அம்புலன்ஸில் ஏற்றப்படுகிறான்.

# சார்ஸினால் வீழ்ந்த சீன விமான சேவை



சீனாவில் ஏற்பட்ட 'சார்ஸ்' நோயின் அச்சுறுத்தல் - அந்நாட்டின் விமான சேவையை மோசமாகப் பாதித்துள்ளது. இந்நோய்த் தாக்கத்திற்கு முன்பு, உலகில் மிகவேகமாக வளரும் விமானசேவையை சீனா கொண்டிருந்தது. சீனாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மத்தியதர வகுப்பு விமானசேவை, உலகில் மிகவும் பிரபல்யமானதாக இருந்தது என்றும் - அநேகர் இதனால், சீன விமான சேவையையே அதிகம் நாடியிருந்ததாகவும் உலக விமான சேவைகளுடன் தொடர்பான அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதிகரித்த வருமானம் காரணமாக - புதிதாகவும், மறுசீரமைத்தும 50 விமான நிலையங்களை சீனா, உருவாக்கியது. ஆனால், இவையனைத்தும், 'சார்ஸ்' வைரஸினால் இன்று மோசமான நிலையை அடைந்துள்ளன.



வொஷிங்ரனிலுள்ள - ரோனால்ட் ரீகன் சர்வதேச விமானநிலையத்தில், பயணிகளைச் சோதிக்கும் தீவிரமான நடைமுறைக்கு - பார்வையற்ற இந்தப் பெண்ணும் தப்பவில்லை.

# வாய், கண்களை தைத்துக்கொண்டு ஈரானியரின் புதுமையான போராட்டம்

## திருப்பியனுப்புவதற்கு பிரிட்டன் முயற்சி

தம்மை மீண்டும் ஈரானுக்கு அனுப்ப வேண்டாம் எனக்கோரி, 33 வயதான அமினி என்ற ஈரானியர் தனது கண்களையும், வாயையும், ஊசி நூலினால் தைத்துக்கொண்டு பிரிட்டனில் போராட்டம் நடத்திவருகிறார்.

இவரை மீண்டும் ஈரானுக்கு அனுப்புவது என, பிரிட்டன் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இவரை, மருத்துவக் குழு ஒன்று பரிசோதித்ததில் - இவர் ஈரானில் கடும் சித்திரவதையை அனுபவித்துள்ளதை உறுதிசெய்தது. இவரை திருப்பியனுப்ப வேண்டாம் என அம்மருத்துவக் குழு - பிரிட்டன் அரசுக்கு சிபார்சும் செய்துள்ளது.

அமினி, உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார். பலமாகத் தாக்கப்பட்ட வடுக்கள் அவரது உடலில் உள்ளன என, இவரைப் பரிசோதித்த மருத்துவர் ஒருவர் கூறினார். இவரின் அடிப்பாதங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவரைத் திருப்பியனுப்பத் திட்டமிடும்



பிரிட்டிஷ் அதிகாரிகளின் முடிவைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன் என, மருத்துவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஈரானில், ஆறு வருடமாக அமினி சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். அங்கு பலவித சித்திரவதைகளையும் அனுபவித்துள்ளார். ஈரானிய அரசுக்கு எதிரான கவிதைகளை இயற்றியது, அவற்றைப் பொது இடங்களில் படித்துக் காட்டியது, தலைமறைவு கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் உறுப்பினர் என்ற - பல குற்றச்சாட்டுகளை ஈரான இவர் மீது சுமத்தியிருக்கின்றது.

ஈரான் - சிறையிலிருந்து இவரை விடுவித்துவிட்டதால் அவருக்கு அங்கு எந்த ஆபத்தும் இப்போது இருக்காது, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் குற்றஞ்சாட்டப்படமாட்டார்கள் என, பிரிட்டிஷ வெளியுறவு அமைச்சு, தனது அடைகலம் கோரல் நிராகரிப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

உலகவலம்

# பேரழிவு ஆயுதங்களை ஈராக் அழித்துவிட்டதாம்

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர்

மார்ச் மாதத்தில், ஈராக் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்பே, ஈராக் அதிகார பீடம் - பேரழிவு ஆயுதங்கள் அனைத்தையும் அழித்துவிட்டதுபோல் தோன்றுவதாக, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்தார். 'இன்னும் நாம் தேடலைக் கைவிடவில்லை. நூற்றுக்கணக்கான சந்தேகத்திற்குரிய இடங்களில் இந்த ஆயுதங்களை இன்னும் தேடிக்கொண்டே இருக்கின்றோம்' என அவர் கூறினார்.

ஈராக் மீதான படையெடுப்பு ஆரம்பித்தது முதல், இதுவரை அங்கு எந்தப் பேரழிவு ஆயுதங்களும் அமெரிக்காவால் மீட்கப்படவில்லை. ஈராக்கிடம் இத்தகைய ஆயுதங்கள் இருப்பதாகக் கூறியே அதன்மீது படையெடுத்த அமெரிக்கா, தற்போது இவ் விவகாரத்தினால், விளக்கம் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகச் செய்தியாளர்கள் தரப்பில் கருத்து வெளியிடப்படுகிறது.

# ஈராக் விவகாரத்தில் தலையிட வேண்டாம்; அமெரிக்கா - ஈரான் பரஸ்பர குற்றச்சாட்டு!



ரம்ஸ் பீல்ட்

(வொஷிங்ரன்)

ஈராக் விவகாரங்களில் ஈரானைத் தலையிட வேண்டாம் என அமெரிக்க புஷ் நிர்வாகம் மீண்டும் எச்சரித்துள்ளது. தனது அயல்நாட்டையும் தீவிர முஸ்லிம் ஆட்சியுள்ள நாடாக மாற்ற, ஈரான் திரைமறைவு வேலைகளைச் செய்வதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட் எச்சரித்துள்ளார். வெளியுறவுக்கான கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய ரம்ஸ் பீல்ட் - தற்போது ஈராக்கிற்கு உதவும் தகுதியை ஈரான் இழந்துள்ளது என மேலும் தெரிவித்தார்.

எனினும் - இவற்றை மறுத்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சு, அமெரிக்கா தலையிடும் தன்து போக்குகளைக் கைவிடவேண்டும் எனக் கேட்டுள்ளது. இதனிடையே கடந்த செவ்வாயன்று அமெரிக்க - ஈரான் உயர்மட்டச் சந்திப்பு ஒன்று நடைபெற இருந்தபோதிலும், தற்போதய முறுகல் நிலையினால் அது கைவிடப்பட்டது. ஈரானில் முஸ்லிம் தலைமையிலான ஆட்சியை அகற்றி, 1979 இற்கு முன்னான நிலையை ஏற்படுத்த, அமெரிக்கா சதி செய்வதாக ஈரானிய வட்டாரங்களில் சந்தேகம் நிலவுகிறது.

# நிலநடுக்கத்தின் அதிர்வுகள்; அல்ஜீரியாவை மீண்டும் தாக்கு!

நிலநடுக்கத்தின் பின்னான அதிர்வுகள் மீண்டும் அல்ஜீரியாவைத் தாக்கியுள்ளன. இதனால், நேற்று தலைநகர் அல்ஜியர்ஸில் மீண்டும் நிலநடுக்கம் ஆரம்பித்துவிட்டதாகக் கருதி, பொதுமக்கள் அச்சம் காரணமாக வீடுகளைவிட்டு, வெளியான இடங்களுக்கு ஓடினர்.

கடந்த செவ்வாயன்று இரவும், நேற்றுக் காலையும் இந்த நில நடுக்கத்தின் பின்னான அதிர்வுகள் அல்ஜீரியாவைத் தாக்கின. நேற்று ஏற்பட்ட அதிர்வு - 'ரிச்டர்' அளவில் 5.2 ஆகப் பதிவாகியது. செவ்வாயன்று நடைபெற்ற அதிர்வு - 'ரிச்டரில்' 5.5 ஆகப் பதிவானது. பேரழிவைத்தந்த பூமியதிர்ச்சியின் அளவு 'ரிச்டரில்' 6.8 ஆகப் பதிவாகியிருந்தது. இதில் - 2000 இற்கும் மேறபட்ட அல்ஜீரிய மக்கள் பலியானமை தெரிந்ததே. செவ்வாயன்று நடந்த சிறு அதிர்வினால் 200 பேர் காயமடைந்தனர்.

சுமார் ஒரு லட்சம் மக்கள் அச்சத்தினால் இன்னும் வீடு திரும்பாமல் இருக்கின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland





திருமலையில் நேற்று நடைபெற்ற புலிகள் - இராணுவம் சந்திப்பின் போது, பங்கேற்றோரை கண்காணிப்புக் குழுவுடன் முதலாவது படத்திலும், சந்திப்பில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் தளபதிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மிதிவெடிகள் புதைக்கப்பட்ட 989 பிரதேச வரைபடங்கள் ராணுவத்தினரால் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தைத் தவிர - யாழ். குடாநாடு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள 984 பிரதேசங்களின் வரைபடங்களை, இராணுவத்தினர்- யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்திடம் வழங்கியுள்ளனர்.

ஆனால், இவற்றில் - விசேட அதிரடிப் படையினர், கடற்படையினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் உள்ள பகுதிகளின் வரைபடங்கள் வழங்கப்படவில்லை.

படையினர் வழங்கிய வரைபடங்களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டே, மிதிவெடியகற்றும் பிரிவினர், மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது - சரசாலை, மட்டுவில் பகுதிகளில் மொசாம்பிக் நாட்டின் 'ரொங்கோ' பிரிவினரும் - சாவகச்சேரி, டச்சு றோட்டை அண்டிய ஏ - 9 வீதியை , இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் குழுவும் - கோப்பாய், அரியாலை, கல்ட்டி, செம்மணி போன்ற இடங்களில் 'த ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனமும் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேபோல் - வன்னிப்பகுதியில், மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - யாழ். குடாநாட்டில், மிதிவெடி அகற்றப்பட்ட சில பிரதேசங்கள் மீளவும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கைதடி, நுணாவில் மற்றும் திறந்த பல்கலைக்கழகப் பகுதி என்பனவே இவ்வாறு மீள உரியவர்களிடம் வழங்கப்பட்டுள்ளவையாகும்.

வெகுவிரைவில் - நாவாந்துறை சேமக்காலைப் பகுதி, புத்தூர் கிழக்குப் போன்ற பிரதேசங்களில் உள்ள மிதிவெடிகளும் அகற்றப்படவுள்ளதாக 'த ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் தெரிவித்துள்ளது. (ரா)

## இந்தியாவின் பெற்றோலிய நிறுவனம் இலங்கையிலும் ஆரம்பம்!

(கொழும்பு)

இந்தியப் பெற்றோலிய நிறுவனம், தனது பணிகளை நேற்று இலங்கையில் ஆரம்பித்தது. இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ராம் நாயக், நேற்று இரண்டு நாள் விஜயமாக இலங்கை வந்து, நிறுவனத்தின் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

அவர், இன்று திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களையும் பார்வையிடச் செல்கிறார். இலங்கையில், இந்தியப் பெற்றோலிய நிறுவனம் 4 பில்லியன் ரூபாவை முதலிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மிதிவெடி அகற்றும் குழு மன்னாருக்கு!

மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொண்ட, எப்.எஸ்.டி நிறுவனம் தனது செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிறுத்தியுள்ளது.

நீண்டகாலமாக இக்குழு, யாழில் மிதிவெடி அகற்றும் பிரிவில் ஈடுபட்டு வந்தது. தற்போது - மன்னார்ப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியை ஆரம்பிப்பதற்காகவே இக்குழு அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ரா)

## புற்றுநோய் சிகிச்சை

கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள - புற்றுநோய் வைத்திய நிபுணர், ஜூன் மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை வழங்கவுள்ளார்.

## தமிழ்க் கைதிகளின் விசாரணை துரிதமாக்குவதற்கு உறுதிமொழி

### ஜனாதிபதி சந்திரிகா வழங்கினார்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு, ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அமைச்சர் மகேஸ்வரன், ஜனாதிபதி சந்திரிகாவுடன் இவ்விடயம் தொடர்பாக நடத்திய பேச்சுக்களின்போது, மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான கைதிகள்- விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தும்படி அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க - இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கிறது.

## மோசமான நிலையில் வல்லைவெளிப் பாலம்

வலிகாமத்தில் இருந்து வடமராட்சிப் பகுதிக்கான பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ள, மிகப் பிரதான பாலமாகிய - வல்லைப் பாலம் மிகமோசமாகச் சேதமடைந்து வருகின்றது.

இந்நிலையில், இதனூடாகப் போக்குவரத்துச் செய்பவர்கள் ஆபத்துக்களையும், விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலையிலேயே பயணிக்கின்றனர். 1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் மிக மோசமாகச் சேதம் அடைந்திருந்த இப்பாலம், பனங்குற்றிகளால் நிரப்பப்பட்டு தற்காலிகமாக மட்டும் புனரமைக்கப்பட்டு, போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது. தற்பொழுது இப்பனங்குற்றிகள் உக்கல் அடைவதால், பாலம் மீண்டும் சேதமடையத் தொடங்கியுள்ளது.

இதேவேளை, பாலத்தில் பல இடங்களில் துவாரங்கள் ஏற்பட்டு, அவை பெரிதாகிய வண்ணமுள்ளன. இவற்றுக்கு மத்தியில், இப்பாலத்தின் நடுவே இராணுவக் காவலரணும் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (13)

## மாகாண வலைப்பந்தாட்டம் யாழ். அணி வெற்றியீட்டியது

வடக்கு - கிழக்கு மாகாண வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், யாழ். மாவட்டம் மீண்டும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 26 ஆம் திகதி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடந்த இறுதிப்போட்டியில் - யாழ்.மாவட்ட அணியும், திருமலை அணியும் மோதி - 60 இற்கு 15 என்ற புள்ளிகளின் அடிப்படையில், திருமலை அணியை யாழ். அணி தோற்கடித்தது.

இந்த வெற்றிமூலம் 6 தடவைகள் யாழ்ப்பாண அணி தொடர்ச்சியாக வெற்றியடைந்துள்ளது. (ரா)

## திருமலை வளாக மாணவர் வகுப்புக்களை பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்கள், நேற்றுமுதல் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

விரிவுரை மண்டபம், மாணவர் விடுதி, சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றை அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக்கோரி, இந்தப் பகிஷ்கரிப்பில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி கோரிக்கை தொடர்பாக, முன்னரும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கிய உறுதிமொழிகள், இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை உறுதியான வாக்குறுதிகளைத் தரும்வரை, தமது பகிஷ்கரிப்புத் தொடரும் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (10)

## அமெரிக்க அதிகாரிகள்...

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நேற்று, அரச அதிபர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி - ஆகியோரையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இவர்கள், சரசாலைப் பகுதிக்குச் சென்று, அங்கு மிதிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டனர். முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோரையும் சந்தித்து அமெரிக்க அதிகாரிகள் உரையாடினர். (ரா)

## ட்ரிபிள் ஆர்...

மென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்இணக்கப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய 'ட்ரிப்பிள் ஆர்' (RRR) இதுவரை காலமும் - பிரதம மந்திரியின் செயலகத்தில், அவரது நேரடிக் கண்காணிப்பில், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், பிரதமரின் பொருளாதார விவகார ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் ஆகியோரால் நடைமுறைப்படுத்தப் பட்டுவந்தது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை, மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்த, தம்மிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குமாறே விடுதலைப் புலிகள் கோரினர். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான நடவடிக்கைகளுக்கு ஏற்ப, அரசாங்கம் சாதகமாகச் செயற்பட்டாலேயே அடுத்த மாதம் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவிவழங்கும் மாநாட்டில், தாம் கலந்து கொள்ளப்போவதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - அரசின் இந்தத் திட்டம் குறித்து, புலிகளின் தலைமைப்பீடம் முழுமையாக ஆராய்ந்த பின்னரே, புலிகளின் நிலைப்பாடு அறிவிக்கப்படுமென புலிகள் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார். (01)

## அரசாங்கத்தின்...

னவே நேற்றுமுன்தினம் மின் அஞ்சல் மூலமாக, விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேற்படி இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் பதில் குறித்து, விடுதலைப் புலிகள் ஏற்கனவே விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.

அரசினால் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பதிற்கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள், முழுமையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு ஈடாக அமையுமா என்பது குறித்து அரசியல் வட்டாரங்களில் சந்தேகமே நிலவுகிறது.

அரசாங்கத்தின் யோசனை அரசியல் அமைப்புக்குட்பட்டதே என்பதை அமைச்சர் பீரிஸ் நேற்றும் செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டிருப்பதையும் இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## நோர்வே...

இன்று ஆறு கட்டப்பேச்சுவார்த்தைகள் கடந்துள்ளன. இன்னும் பேசப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. இக்கட்டத்தில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படலாமென்ற ஐயப்பாடு எமது மக்கள், மற்றும் சர்வதேசம் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, எமது மக்களின் விடுதலைக்காக, - இன்று அரசாங்கத்திடம் கண்டிப்பான உத்தரவாதங்களைப் பெறுவதற்காக, வித்தியாசமான முறையில் நோர்வே அரசாங்கத்தின் ஊடாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

இந்த நிலையில்-

பலவகையிலும் பொறுமையைக் காத்தே இப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். பேச்சுவார்த்தை மூலம் பெறப்படும் எந்த நிதியும்,

எமது பகுதியின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதே தேசியத் தலைவரின் நிலைப்பாடாகும் என்று கேணல் கருணா தனது பேச்சில் குறிப்பிட்டார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 97.00 | 97.40 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.67 | 160.12 |
| 1 யூரோ | 114.30 | 115.65 |
| 1 சுவிஸ் பிராங் | 74.88 | 76.22 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.26 | 64.43 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |

DMI
ஆரியகுளம் சந்தி
வெளிவாரிப் பிரிவு
1 ST in com
இற்கான வகுப்புக்கள் எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.
ஆரம்பம் 01.06.2003 ஞாயிறு
மாலை 4.00 மணி (S.L.T.)
குறிப்பு:-
❖ Part I Part II இற்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
❖ நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(சி-962)